www.tamilarangam.net

தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

# எரிமலை

கலை கலாச்சார அரசியல் சமூக ஏடு ஆகஸ்ட் 1991




புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சுயதரிசனம்

நான் சுதந்திரமானவன்
என்னைக்
கட்டுப்படுத்த முடியாது.

கட்டிப்போட முயன்றவர்கள்
தங்கள் காயங்களுக்குக்
கட்டுப்போட்டுக் கொண்டிருக்கிறார்கள்!

நான் நித்தியமானவன்
என்னை
அழித்துவிட முடியாது.
அழிக்க நினைத்தவர்களின்
கல்லறைப் பெட்டிகளைக்
கரையான்
அரித்து விட்டது.

நான் மண்ணில்தான்
நிற்கிறேன்.
ஆனாலும்-
வானத்தின் தோலைக் கிழித்துக்
காலுக்குச் செருப்பாகப்
போட்டுக் கொள்ளும்
வல்லமை எனக்குண்டு!

புயல் - என் விசிறி
பூமியை
நடுநடுங்க வைக்கும்
பூகம்பம் எனக்கு
ஊஞ்சல் விளையாட்டு

இடியோசை
என்னைத் துயில் நீங்க வைக்கும்
திருப்பள்ளி எழுச்சியின்
இன்னிசை!

தோன்றிய நாள் தொட்டே
பூமி அனைத்தையும்
தன் தலையில்
தாங்கி வருவதாகச் சொல்லப்படும்
ஆதிசேடனுக்கு
என்
கால்நடை ஒன்றே
கழுத்து வலியை உண்டாக்கிவிடும்.

என் பெருமூச்சுப் புறப்படும்போது
எட்டுத் திசைகளும்
இடம் மாறிப் போகின்றன.

ஒன்று திரண்ட
உழைக்கும் இனத்தின்
ஆற்றலுக்கு -
அடையாளம் நான்!

- கவிஞர் மு. மேத்தா -

www.tamilarangam.net



எரிமலை

கலை கலாச்சார
அரசியல் சமூக ஏடு

பத்தாம் ஆண்டு

ஆகஸ்ற் 1991

ஆக்கங்கள்,
அபிப்பிராயங்கள்,
மற்றும் தொடர்புகட்கு:

எரிமலை
c/o C.C.T - France,
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 43 58 11 42

# சத்திய சோதனை

போராட்டம், அதுவும் விடுதலைப் போராட்டம் எப்போதும் எளிதாக நடந்து முடிந்ததாக வரலாறு இல்லை. கொந்தளிப்புகள், சோதனைகள், சாதனைகள், ஏற்ற இறக்கங்களின் முடிவிலேயே விடிவின் ரேகைகள், சுதந்திர வானில் படர ஆரம்பிக்கின்றன. கொடூர அடக்குமுறை எனும் பூகம்பக்கடலை எதிர்த்தே விடுதலைப் படகு வீரத்துடனும், தாங்கொணா வேதனையின் விம்மல் வெடிப்புகளுடனும் முன்னேறுகின்றது. காலைப் போதில், ஒளிவீசும் மணிபல்லவத்தைக் கண்ணாலே காண்பதற்கும், சுதந்திரமாய் அமைந்த அப்பசுந்திடல்த் தீவில் எமது கால்களை உறுதியாகப் பதிப்பதற்கும் நாம் கடக்கவேண்டியது அக்னிக் கடல்; உலோக ஆர்ப்பரிப்போடு, உடல்கள் வேகும் போராழி. சொர்க்கத்தின் மீட்பு, போராளிகளின் இரத்தம் சிந்தும் போராட்டத்தினூடே நிர்ணயம் ஆகின்றது.


ஆனையிறவுப் போரில் நானூறு போராளிகள் வரை வீரமரணத்தை வரித்துக் கொண்டார்கள் என்பது தமிழ்த் தேசத்தை உலுக்கும் சோக நிகழ்ச்சிதான். ஒவ்வொரு தமிழ் நெஞ்சமும், இறந்த வீரர்களுக்காக நெக்குருகி, எஃகின் உறுதி பெற வேண்டியது அவசியம். அழகிய விடுதலைக் கனவைச் சுமந்து திரிந்த எமது இளம் வீரர்களின், வீராங்கனைகளின் தியாகம் வீண்போகாது. அவர்கள் தம் தோளில் தாங்கி நடந்த இலட்சியச் சுமையானது, தேசம் முழுமையாலும் சுமக்கப்படவேண்டும். ஆனையிறவுக் கடலேரியில், கொட்டப்பட்ட எமது போராளிகளின் குருதி, நீரில் கரையாது, திரண்டு, கிழக்குக் கரையில், செஞ்சூரியனாக உதயமாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தியாவில், குறிப்பாகத் தமிழ் நாட்டில் ஈழத் தமிழர்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் எதிராக மத்திய, மாநில அரசுகள் எடுத்துவரும் நடவடிக்கைகள், நிச்சயமாக தமிழீழத் தேச பக்தர்களுக்கு மனக்கிலேசத்தை அளிப்பதாக இருக்கும். இந்தியா, எமது பூரண விடுதலைக்கு தடையாக உயர்ந்து நிற்கும் இமயம் என்பது அறிவு பூர்வமாக நிறுவப்பட்டு நிதர்சனமாக வெளிப்படும் போது, அது குறித்து அகவயப்பட்ட நிலையில், சோர்ந்து போதல் ஆகாது. புறநிலை உண்மைகளை, ஆன்மீக பலத்துடன், மக்கள் எழுச்சியுடன், தார்மீக உணர்வுடன், விடுதலைச் சக்தியின் ஆளுமையுடன் எதிர்கொள்ளலே, சுதந்திர வீரர்களினதும், தேசபக்தர்களினதும் கடனாகும். தமிழ்நாட்டு மக்கள் வெள்ளம், இமயத்தை மூழ்கடிக்கும் குமரிக் கடலாக மாற வேண்டும்; மாற்றப்பட வேண்டும். சர்வதேச அரங்கில், நடைபெற்றுவரும் தன்னாட்சிப் போராட்டங்கள், தமிழீழ விடுதலைத் தீயை மூட்டிவிடும், எங்கள் ஏக்கங்களை விரட்டி, இதயத்தைத் தடவிவிடும் தென்றலாக வீசுகின்றன. விடுதலைப் போராட்டம் வேகமாக முன்னேறி வருகின்றது. அவ்வேளையில், சோதனைகளும், தடைகளும், சிக்கல்களும் தலைக்கு மேலே எழுகின்றன. விடுதலை வீரர்கள் தலையை நிமிர்த்தி அவற்றை வென்று முன்னேறும்போது, அத்தடைகள், பாலமாக அமைந்து விடுகின்றன; போராட்டம் வேகம் பெறுகின்றது; விடுதலையும் அண்மித்து விடுகின்றது. இச் சத்திய சோதனையினூடே விடுதலைப் போராட்டம் நடந்து நிறைவுறும் என்பது தவிர்க்கமுடியாத வரலாற்று நியதியாகும். ●



## நாம் அணிவகுத்துள்ளோம் !

நாம் அணிவகுத்துள்ளோம்....
நாம் தமிழ் ஈழப் படைவீரர்கள்
நாம் அணிவகுத்துள்ளோம்
இழந்த நமது நாட்டை மீட்க
எதிரி எமது நாட்டை
வஞ்சகமாக அபகரித்துவிட்டான்!
அதைக்கண்டு நாம் அஞ்சவில்லை
புயலெனச்சீறி
இழந்த நாட்டை மீட்க
நாம் அணிவகுத்துள்ளோம்....
நாம் தமிழ் ஈழப் படைவீரர்கள்
எமது படையணி கடக்க வேண்டியது
நெருப்பாறென்பது எமக்குத் தெரியும்

ஆனால்.... ....
அதைத் தாங்கக் கூடிய
மக்கள் ஆதரவென்னும்
கவசம் எம்மிடம் உண்டு
எதிரியின் ஆயுதமோ பலம் பொருந்தியது
எமது
ஆத்ம பலமோ அதைவிட வலிமைவாய்ந்தது
எதிரியின் குண்டுகள் வெடிக்கும்.. ... ...
ஆனால்
எமது விடுதலை நெஞ்சங்கள்
எரிமலையென வெடிக்கும் சத்தத்தில்
அதன் சத்தம் அமுங்கிவிடும்!
நாம் அணிவகுத்துள்ளோம்.......
நாம் தமிழ் ஈழப் படைவீரர்கள்
எமது அணிவகுப்பு
எமது தமிழ்ஈழ மக்களிடையே
அணிவகுத்துச் செல்கிறது!
நாம் செல்லும் இடமெல்லாம்.. ....
எமது எதிரிகள் அஞ்சி ஓடுகிறார்கள்
மக்களிடம் உள்ள
பிரதேசம் சாதி
மதமெனும் பேய்களும்
அலறி ஓடுகின்றன... ....
எமது படையணி விரைகிறது... ...
எமது தேசத்தை மீட்க
நாம் செல்லும் இடமெல்லாம்
காடுகள் கழனிகள் ஆகின்றன
வெட்டிப் பேச்சு வீரர்கள்
மிரண்டோடுகின்றனர்.... ...!
உழைப்போர் முகங்களில்
உவகை தெரிகிறது
ஏழைகளின் முகங்களில்
புன்னகை உதயமாகிறது.


தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்
வே. பிரபாகரனினால் 1981 ம் ஆண்டில் எழுதப்பட்ட கவிதை)

www.tamilarangam.net



# கரும்புலிகள்

- மணிமாறன் -




தமிழீழ போராட்ட வரலாற்று அகராதியிலே "கரும்புலி" என்ற சொல் தம்மையே முழுமையாக அர்ப்பணித்துத் தியாக மரணத்தை தழுவிக்கொள்ளும் போராளிகளின் வீரப்பெயராக இன்று இடம்பெற்றுள்ளது. முழுமையான தியாகத்திற்கு இன்று இச்சொல்தான் குறியீட்டுப் பெயராகியுள்ளது. இதுவரை காலமும் தியாக மரணங்களுக்கு இரண்டாம் உலகப்போரின் போது ஜப்பானிய யுத்தச் சிப்பாய் ஒருவன் குண்டு ஒன்றை வயிற்றில் கட்டிக் கொண்டு எதிரிநாட்டு யுத்தக்கப்பல் ஒன்றின் புகைக்கூண்டுக்குள் குதித்து அக்கப்பலைத் தனது தாய்நாட்டிற்காக சிதைத்த வரலாறு முன்னுதாரணமாக காட்டப்பட்டு வந்தது.

ஈழத்தின் சிறு சஞ்சிகையாளர் ஒருவர் தனது தமிழகப் பயணத்தின்போது மணியாச்சி ரயில் நிலையத்தில் இறங்கி வாஞ்சிநாதனின் காலடிபட்ட அம்மண்ணை நெற்றியில் அள்ளிப் பூசிக்கொண்டதாக பெருமைப்பட்டுக் கொண்டார். இவர் மட்டுமல்ல இவரைப் போன்ற பலரும் இப்படித்தான் எமது மண்ணிலே போராளிகள் நிகழ்த்திவரும் சாதனைகள், தியாகங்களையெல்லாம் மாற்றாந் தாய் மனப்பான்மையுடனேயே நோக்குகின்றனர். இன்றைக்கு எமது மண்ணிலே போராளிகள் சிந்திய குருதியால் சிவப்பேறாத மண் எங்கேயாவது இருக்கின்றதா?

---

**தன் மரணத்தின் நாழியை தானே தீர்மானித்துக்கொண்டு தனது சவப்பெட்டியை தானே தன் முதுகில் சுமந்துகொண்டு சென்றான்**

---

உலகிலேயுள்ள இராணுவச் சிப்பாய்கள் தமது தாய்நாட்டிற்காகச் சில தியாகங்களைச் செய்திருக்கின்றார்கள். அவற்றை வரலாறு பதிவுசெய்து வைத்துள்ளது. ஆனால் ஒரு தேசத்திற்கான விடுதலைப்போராட்டம் என்ற தளத்திலே நின்று நோக்கும்போது எமது மண்ணின் மைந்தர்களான கரும்புலிகளின் அர்ப்பணிப்பு ஈடு இணையற்றது, மட்டுமன்றி உலகிலே ஒடுக்கப்பட்டு வரும் தேசிய இனங்களின் விடுதலைக்கு வழி காட்டக் கூடியதுமானது.


1987 ம் ஆண்டு வடமராட்சியில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட "ஒப்பரேசன் லிபரேசன்" என்ற இன ஒழிப்பு நடவடிக்கைகளின் போது இந்திய அரசின் சூழ்ச்சியால் விடுதலைப் போராளிகளுக்கு ஏற்பட்ட பின்னடைவுகளைக் காரணமாக வைத்துக் கொண்டு போராட்டத்தைப் பலவீனப்படுத்த சிறிலங்காவின் இனவாத அரசு முற்பட்ட வேளையில் வெடிமருந்துப் பொதிகள் அடங்கிய வாகனம் ஒன்றை நெல்லியடி இராணுவ முகாமுக்குள் செலுத்தி எதிரிகள் முகாமிட்டிருந்த கட்டிடத்தைத் தகர்த்து அழித்து எதிரிகளுக்கு பௌதீக ரீதியான சேதத்தையும் உளரீதியான பாதிப்பையும் ஏற்படுத்தி சிறிலங்கா அரசுக்கு இராணுவ மொழியில் ஒரு எச்சரிக்கையையும், வெளி உலகிற்கு எமது விடுதலைப் போராட்டத்தின் உறுதித்தன்மையையும், எமது சொந்த மக்களிற்கு போராட்டத்தின் மீது நம்பிக்கையையும் ஊட்டியவன் கப்டன் மில்லர்.

தனது மரணத்தின் நாழிகையை தானே தீர்மானித்துக் கொண்டு தனது சவப்பெட்டியை தானே தன் முதுகில் சுமந்துகொண்டு சென்றான். நெல்லியடியில் மேற்கொள்ளப்பட்ட மில்லரின் தாக்குதல் ஈழப்பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு ஒருபோதும் சாதகமான விளைபலனைத் தராது என்பதை தமக்கு எடுத்து உணர்த்தியது, என முன்னாள் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் அத்துலத் முதலி அண்மையில் ஒரு பத்தி

www.tamilarangam.net




ரிகைப் பேட்டி ஒன்றில் தெரிவித்தார். நெல்லியடியில் விழுந்த அடியின் வலிதாங்க முடியாமல் புதுடில்லியும் தனது முதுகைத் தடவிக்கொண்டது. முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி இத்தாக்குதலைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டார். "இலங்கைப் பிரச்சனைக்கு வன்செயல்கள் மூலமான அணுகுமுறைகள் எத்தரப்பிலிருந்து மேற்கொள்ளப்பட்டாலும் அவற்றை இந்தியா ஒரு போதும் சகித்துக்கொள்ளாது". என்பது அவரது அறிக்கையின் தாற்பரியமாகும்.



**கப்டன் கொலின்ஸ்**

எமது போராட்ட வரலாற்றில் கடற்புலிகள் அவ்வப்போது இலங்கை கடற்படையினருக்கு எதிராக கடலில் கடலடிவெடிக் கண்ணிகளைப் புதைத்து கடற்படைக் கப்பல்களை தகர்த்திருக்கின்றார்கள். அதேவேளையில் தரையில் இடம்பெற்ற தாக்குதல்களின் போதும் அவர்கள் வீரமரணத்தை தழுவிக்கொண்டிருக்கிறார்கள்.


கடந்த 10. 07. 90 அன்று இரவு மூன்று கடற்புலிகளான மேஜர். காந்தரூபன், கப்டன். கொலின்ஸ், கப்டன். விநோத் ஆகிய மூவரும் கரும்புலி மில்லர் காட்டிய பாதையில் கடலில் தரித்துநின்ற யுத்தக்கப்பல் ஒன்றை தகர்த்துப் போராட்டத்திற்கு மேலும் வலிமை சேர்த்துள்ளார்கள்.



**மேஜர் காந்தரூபன்**

அண்மைக் காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தரைமார்க்கமான இராணுவ நடமாட்டங்கள் முற்றாகத் தடுக்கப்பட்ட நிலையில் -கடல் மார்க்கமாகவே பாரிய இராணுவ தளபாடங்களை முகாம்களுக்கு பட்டுவாடா செய்வதற்கு இப்போர்க் கப்பல் வடமராட்சி கடற்பிராந்தியத்திற்கு அனுப்பப்பட்டு அங்கு நங்கூரம் இடப்பட்டு இருந்தது. ஆயுதங்களோடு வந்து தரித்துநின்ற இந்த யுத்தக்கப்பலை கடற்புலிகளின் கரும்புலிப் பிரிவினரான மூன்று போராளிகள் நடுக்கடலில் வைத்து தகர்த்து மூழ்கடித்தனர். வெடிமருந்துப் பொதிகள் அடங்கிய படகுகளை எதிரிக்கு எதிரான யுத்த தளபாடமாக மாற்றியமைத்த அதேவேளையில் தமது சவப்பெட்டிகளாகவும் வடிவமைத்து அதன் மீது அமர்ந்து சென்று தியாக மரணத்தை தழுவிக்கொண்டனர்.

இது ஒரு தேசபக்தன் தன்நாட்டின் விடுதலைக்காக செய்யக்கூடிய உயர்பட்சமான விடுதலைப் பணியாகும். இத்தாக்குதலின் போது கப்பலோடு பல மாலுமிகளையும் இலங்கையரசு இழக்கவேண்டியதாயிற்று.



**கப்டன் விநோத்**

வியட்நாமிய யுத்தம் முடிந்த பின்னர் வியட்நாமிய யுத்தம் தொடர்பாக உலகம் பூராவும் 400 கும் மேற்பட்ட நூல்கள் வெளியாயின. ஆனால் எமது மண்ணில் இன்று மூன்றாம் கட்டமாக போர் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எமது தேசவிடுதலைக்கான இப்போராட்டம் தொடர்பான எத்தனை நூல்கள் இதுவரை வெளிவந்துவிட்டன. ஒருமுறை பத்து விரல்களையும் விரித்து மடித்து எண்ணத் தொடங்கினால் பத்துவிரல்களையும் மடிக்கக்கூடிய அளவு தொகையிற்தானும் நூல்கள் இல்லை என்ற கசப்பான உண்மையையும் கூறித்தான் ஆகவேண்டும். இந்தநிலை என்று தீருமோ? எமது மாவீரர்களின் துப்பாக்கிகள் படைத்த சாதனைகளை எமது கலைஞர்களின் தூரிகைகள் கலைவடிவமாக்கியும் பேனா மன்னர்களின் பேனா முனைகள் இலக்கிய வடிவமாக்கியும் அடுத்த தலைமுறையினரிடம் ஒப்படைப்பார்களா?

**கரும்புலி மில்லர் காட்டிய வழியில்**
**கடற்புலி யானவர் களப்பலியாயினர்**
**விடுதலை பேசும் திசைகளிலெல்லாம்**
**வீரரின் பெயரால் முழங்குது முரசு....!**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆனையிறவுப் போர்

***போராட்ட வரலாற்றின் கடக்க வேண்டிய நெருப்பேரி***




தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஆனையிறவுப் போர் பெரும் முக்கியத்துவம் பெறுகின்றது. இதன் முக்கியத்துவத்தை பரந்த, நீண்ட விடுதலைப் போரிலிருந்து தனிமைப்படுத்தியோ, ஆனையிறவு முகாம் தொடர்பான ஒரு குறிப்பிட்ட இராணுவ நடவடிக்கையாகக் (operation) குறுக்கியோ பார்க்க முடியாது. கெரில்லாப் போர் முறைக்கும், முழுமையான மரபுப் போர் முறைக்கும் இடைப்பட்டதான அரைமரபுப் போர்முறையில் தொடர்ச்சியான தாக்குதல்கள் மூலம், ஆனையிறவு இராணுவ முகாமை அகற்றுதலே விடுதலைப் புலிகளின் போர்த் தந்திரமாக உள்ளது.

விடுதலைப் போரின் வெற்றிக்காக ஆனையிறவு முகாம் விரைவில் அகற்றப்படவேண்டியது, விடுதலைப் புலிகளின் போர்த் தந்திரோபாயத் திட்டத்தில் மிக அவசியமான கட்டமாக இருக்கின்றது. ஆனையிறவு முகாம், யாழ்ப்பாணக் குடாநாட்டையும், வடபகுதியின் ஏனைய பரந்த நிலப்பரப்புக் களையும், அடர்ந்த விரிந்த, கெரில்லாப் போராட்டத்திற்கு வசதியான பருவகால மழைக் காடுகளையும் இணைக்கின்ற இடத்தில் யாழ்ப்பாண ஏரியின் தென் கரையில் அமைந்துள்ளது. தரை மார்க்கமாக யாழ்ப்பாணக் குடாவையும், ஏனைய தமிழீழப் பகுதிகளையும் துண்டிக்கும் கேந்திர முக்கியத்துவம், ஆனையிறவு இராணுவ முகாமிற்கு உண்டு. தவிர, யாழ்குடாநாடு, முல்லைத் தீவு ஆகிய பிராந்தியங்களின், கிழக்குக் கடற் பகுதிகளில் ஸ்ரீலங்கா கடற்படையானது நடமாட்டங்களையும், ரோந்துகளையும், விநியோகங்களையும், போர் நடவடிக்கைகளையும் புரிவதற்கும், விடுதலைப்புலிகளின் கடல் நடமாட்டத்தை உணவு, ஆயுததளபாட, எரிபொருள் விநியோகங்களை, இந்தியாவுடனான கடல் செலவுகளைக் கண்காணிப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்குமான, கடற்தளமாகவும் ஆனையிறவு முகாமின் விஸ்தரிப்பு விளங்கக் கூடியது. முன்னர் காலங்களில், சுங்கத்தடையாக இருந்த இம் முகாம், இந்திய இராணுவம் இருந்த காலத்தில் பலப்படுத்தப்பட்டும், பல நூறு யார்களுக்கு விஸ்தரிக்கப்பட்டும், கெலிமேடைகள் அமைக்கப்பட்டும் உறுதியான, நிரந்தர, வெற்றி கொள்ளக் கடினமான தளமாக நீண்டகாலக் கண்ணோட்டத்தில் அமைக்கப்பட்டது. இந்திய இராணுவ வெளியேற்றத்தின் பின்னர் இம்முகாம் மேலும் பலப்படுத்தப்பட்டு, ஒரு பற்றாலியன் படையினரைக் கொண்டதாகவும், முன்னிலைக் காவலரன்களை, பங்கர்களை, கண்ணிவெடி வயல்களைக் கொண்டதாகவும், ஆக்கப்பட்டது. ஆனையிறவு முகாமை சுற்றியுள்ள பரந்த வெளிப்பகுதிகள் முகாமை நெருங்குவதற்கு கடினமான நில அமைப்பைக் கொடுத்தன. பனை மரங்களைக் கொண்ட வெளியான பகுதிகளும், பெரும்பாலான காலங்களில் வற்றிப் போய்க் கிடக்கும் கடல் ஏரிகளும், உப்பளங்களும், முகாமிலிருந்தும், விமானங்களில் இருந்தும் கண்காணிப்பதற்கும், தாக்குதல் செய்வதற்கும், வசதியை அளித்தன. அதே வேளை, முகாம் சுற்றி வளைக்கப்பட்டால், தென்பகுதியிலிருந்தும், ஏனைய வடக்குக் கிழக்கு இராணுவ தளங்களில் இருந்தும் உதவிப் படைகளை, உணவு, தளபாட விநியோகங்களைக் கடற்படையினர் கடல்மார்க்கமாக செய்வதற்கான அனுகூலத்தைக் கொண்டதாகவும் ஆனையிறவு முகாம் காணப்பட்டது.

யூலை மாதம் ஆரம்பம் முதல் ஆனையிறவு முகாம் மீதான, முற்றுகை, இறுக்கப்படவும், அதன் மீதான தாக்குதல் உக்கிரப்படுத்தப்படவும் செய்யப்பட்டது. மன்னார் சிலாபத்துறை முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் போது தரைப் படை, கடற்படை, ஆகாயப்படை ஆகியவற்றிற்கு எதிராக பரந்த வெளிகளில் நடைபெற்ற சண்டைகளின் போது பெற்ற அனுபவமும், திடீர்ப் பதுங்கு குழிகளை அமைத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



துச் சண்டையிடுவதில் அடைந்த திறமையும் ஆனையிறவு முகாம் மீதான தாக்குதலுக்கு தூண்டுதலாக அமைந்தன. மேலும், விடுதலைப் புலிகள் அண்மையில், அதிநவீன விமான எதிர்ப்புப் பீரங்கிகளைக் கைவரப் பெற்றதும் ஒரு காரணம் எனலாம். ஆகாயத் தாக்குதல்களை நடத்துவதற்கும், தரைப்படைகளின் நகர்வைப் பாதுகாத்து உதவுவதற்கும், காயம் பட்டவர்களை அகற்றுவதற்கும், விநியோகங்களுக்கும், புதிய உதவிப்படைகளை விரைவாக கொண்டுவந்து குவிப்பதற்கும் கெலிக் கொப்டர்களும் விமானங்களும் பயன்பட்டுவந்தன. இதுவரை காலமும், 2000, 3000 அடி உயரத்திற்குச் சுடக்கூடிய 50 கலிபர் துப்பாக்கிகளைப் பயன்படுத்திய விடுதலைப் புலிகள், 7000 அடி வரை சுடக்கூடியதும், தொடர்ச்சியாக ஒரே நேரத்தில் பல் துப்பாக்கிகள் இயங்கக் கூடியதுமான பீரங்கி வகைகளைப் பெற்றதும் ஆனையிறவு முகாம் தாக்குதலுக்கு உந்துதலை அளித்த காரணமாக இருந்துள்ளது. வன்னிச்சண்டையின் போது விழுத்தப்பட்ட 2 கெலிகள், அப்பகுதியில் போரின் போக்கை மாற்றியது குறிப்பிடத் தக்கது.

நூற்றுக் கணக்கில் அருள் ரைபிள் கிரனைட்டுக்களையும், பஸிலன் 2000, பஸிலன் 5000 மோட்டார்களையும் றொக்கட் ஏவும் கிரனைட்டுக்களையும் முகாமிற்குள் செலுத்தி, முகைமைச் சின்னாபின்னமாக்கிய விடுதலைப் புலிகள், படிப்படியாக முகாமைச் சுற்றி வளைத்து, நெருங்கத் தொடங்கினர். திடீர்ப் பதுங்கு குழிகளை அமைத்தும், மரங்களின் பின்னால் நிலை எடுத்துப் போரிட்டும் முன்னேறினர். கண்ணிவெடி வயல்களைக் கடப்பதற்காக, கவசவாகனங்களாக மாற்றம் செய்யப்பட்ட புல்டோசர்களையும், உழவு இயந்திரங்களையும், பெங்களூர் ரோபிடோ என்ற நீளக் குழாய்க் குண்டுகளையும் பயன்படுத்தினர். முகாமிற்குள் விநியோகங்களை வீசவோ, முகாமிற்குள் இறந்த, காயம்பட்டவர்களை அகற்றவோ முடியாது கெலிக்கொப்டர்கள் திணறின. 5000 அடிக்கு மேலேயே கெலிக் கொப்டர்களும், விமானங்களும் பறக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அவ்வளவு உயரத்தில் இருந்தவாறு சுடுதலோ, குண்டுகளை வீசுதலோ, சாத்தியமான காரியமாகப்படவில்லை. தரைப்படைக்கு உதவுவதற்காக அதி உயரத்தில் இருந்து இறங்கி வந்த விமானங்களும், கெலிக்கொப்டர்களும் கடும் தாக்குதலுக்கு உள்ளாகின. 2 கெலிக்கொப்டர்களும், 1 ஆகாயப்படை விமானமும், மோசமான காயங்களுக்கு உள்ளாகியோ, சேதமாக்கப்பட்டோ விரட்டியடிக் கப்பட்டன. விடுதலைப் புலிகள், முகாமிலிருந்து 200 யார் தூரத்திற்கு நெருங்கி வந்திட்ட வேளையில், தரைமார்க்கமானதும், ஆகாயமார்க்கமானதுமான உதவி கிடைக்காத நிலையில் கடல்வழி ஆன மார்க்கத்தை அதிகூடியளவு பயன்படுத்த ஸ்ரீலங்கா அரசின் ஆயுதப்படைத் தலைமைப்பீடம் தீர்மானித்தது.

8000 க்கும் மேற்பட்ட படையினர், ஆனையிறவிலிருந்து 8 கி. மீற்றர் தொலைவிலுள்ள, யாழ் குடாநாட்டின் கிழக்குக் கரையிலுள்ள வெற்றிலைக்கேணியில் தரை இறக்கப் பட்டனர். போர்க் கப்பல்கள், பீரங்கிப் படகுகள், வேகப்படகுகள், வள்ளங்கள், டிங்கிகள், என்று 50 க்கு மேற்பட்ட கடற்படைக் கப்பல்கள் பயன்படுத்தப்பட்டன. இந்த இராணுவ நடவடிக்கை பலவேகய என்று பெயரிடப்பட்டு மேஜர் ஜெனரல் டென்ஸில் கொபேக்கடுவவின் தலைமையில் ஒப்புவிக்கப்பட்டது. அவருக்கு உதவியாக, யாழ்ப்பாண தளபதியான விஜயா விமலரத்னா அனுப்பப்பட்டார். கவசவாகனங்கள், பவல் வாகனங்கள், பீரங்கிகள், ட்ரக் வண்டிகள், உழவு இயந்திரங்கள் என்று பலவகை கனரக வாகனங்களும் இறக்கப்பட்டன. ஆனையிறவின் வீழ்ச்சி வடபகுதி முழுவதின் வீழ்ச்சிக்கும் வழிவகுக்கும் என்பதை உணர்ந்த அரசாங்கம், அதனை எப்பாடுபட்டாயினும் உடனடியாக தடுக்க வேண்டும் என்று முடிவெடுத்தது. விடுதலைப் புலிகளின் விடுதலைப் போர்முறைத் திட்டம், வட பகுதி முழுவதையும் முதலில் விடுதலை செய்யப்பட்ட பிரதேசமாக்கி அங்கு தமது நிலையை உறுதிப்படுத்திய பின்னர் படிப்படியாக கிழக்கு பகுதியை மீட்டெடுத்தல் என்பதாகவே காணப்பட்டது. விடுவிக்கப்பட்ட வடபகுதி, சிறந்த அடித்தளமேடையாகக் கருதப்பட்டது. எனவே இச்சண்டை, ஒரு முகாமிற்கு எதிரான சண்டை என்ற நிலையிலிருந்து, முழு அளவிலான போர் என்ற பரிமாணத்தை எடுத்தது. அதிகூடிய இராணுவ எண்ணிக்கை பலம், போர்க்கருவிகள் பலம், கூடிய வெடிமருந்து சக்தி (Fire power) ஆகியன மூலம் ஆனையிறவு முகாமின் வீழ்ச்சியை தடுக்க அரசாங்கம் முனைந்தது.

இப்பாரிய படை எடுப்பை எதிர் கொள்ள விடுதலைப் புலிகள் முடிவு செய்தனர். அதேவேளை, 800 க்கு மேற்பட்ட இராணுவத்தினரை உள்ளடக்கியும், கடந்த சில மாதங்களாக, ஆயுதங்களாலும், வெடிமருந்துகளாலும், உணவுப்பொருட்களாலும் நிரப்பப் பட்டும், கனரக வாகனங்களையும், பீரங்கிகளையும் உடையதாயும், நன்கு அரண் இடப்பட்டும் இருந்த ஆனையிறவு முகாமைக் கைப்பற்றி, புலிக்கொடியினை ஏற்ற விடுதலைப் புலித்தலைமைப் பீடம், 4000 க்கு மேற்பட்ட விடுதலை வீரர்களை அங்கு குவித்தது. ஸ்ரீ லங்கா அரசாங்கம் திருகோணமலை, மட்டக்களப்பு, அனுராதபுரம், கொழும்பு, குடாநாடு ஆகியவற்றிலிருந்து உதவிப் படைகளைப் பெற்றது போல், விடுதலைப் புலிகளும், உதவிப் படைகளை பல்வேறு மாவட்டங்களிலிருந்து வரவழைத்தனர். விடுதலைப் புலிகளின் ஆண், பெண் பிரிவினர் வீராவேசமாக போரிட்டனர். கரும்புலிகளின் தற்கொலைத் தாக்குதல்களும், பெருந்தொகையாகக் குவிக்கப்பட்ட இராணுவத்தினரிடை நடாத்தப்பட்டு, பாரதூரமான அழிவுகளை ஏற்படுத்தின. மேஜர் பால்ராஜின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தலைமையில், ஆனையிறவு முகாம் மீதான தாக்குதல் நடாத்தப்பட்டது. தளபதி பால்ராஜ், அதிநுட்பமான போர்த் தந்திரோபாயங்களை வகுத்து, அவற்றைத் திறம்பட நடத்தி முடிப்பவர் என்று பேர் எடுத்தவர். அதேவேளை, கடற்கரையில் தரையிறக்கப்பட்ட இராணுவத்தினருக்கு எதிரான தற்காப்பு நடவடிக்கையும், தடைப்படுத்தும் நடவடிக்கையும், பல்வேறு தலைமைகளின் கீழ் நடாத்தப்பட்டன. விடுதலைப் புலிகளின் விசேட கொமாண்டோப் பிரிவினர், மேஜர் சொர்ணத்தின் தலைமையில், இராணுவ விசேடப் பணிக்கான கொமாண்டோக்களோடு, கடற்கரையில் மோதி, பலதடவைகள் இராணுவ பலத்தை அழித்து பின்வாங்கி ஓடச் செய்தனர். விடுதலைப் புலிகளின் கடுமையான எதிர்ப்பின் விளைவாக, 8000 க்கு மேற்பட்ட படையினரின் நகர்தல், இராணுவ அதிகாரிகள் வர்ணித்தது போல அங்குலம் அங்குலமாகவே இருந்தது. கண்ணிவெடியில் சிக்கி பலர் கால்களை இழந்தனர். ஸ்னைப்பர் தாக்குதலில் பலர் இறந்து போயினர். நேரடி மோதல்களின் விளைவாக நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். 1000 க்கு மேற்பட்ட இராணுவத்தினர், ஆனையிறவு முகாமிற்கு உள்ளேயும், கடற்கரைப் பகுதியிலும் கொலையுண்டனர். பல அதிகாரிகள் பலியாகினர். அதேயளவு தொகையினர் படுகாயம் அடைந்தனர். கொழும்பு வைத்தியசாலைகள் நிரம்பி வழிந்தன. 100 க்கு மேற்பட்ட அம்புலன்ஸ் வாகனங்கள் அவசர சேவைக்கு அமர்த்தப்பட்டன. 10ம் திகதி ஆரம்பித்த இந்தப் பாரிய இராணுவ நடவடிக்கையின் போது, 24 நாட்களின் பின்னர், அரசபடைகள், முகாமின் கிழக்குப் பகுதியை உடைத்து உள்நுழைந்ததாக அரசாங்கம் அறிவித்துள்ளது. "அவர்கள் உள்நுழைந்தது ஆனையிறவு முகாமுக்குள் அல்ல; தங்களது சவச்சாலைக்குள்" என்று விடுதலைப் புலிகளின் பேச்சாளர் இதனை வர்ணித்துள்ளார். அங்கு சுற்றிவளைப்பில் அகப்பட்டிருக்கும் 800 இராணுவத்தினரை மீட்பதற்காக அல்ல; இவர்களும் அப்பொறிக்குள் அகப்படுவதற்காகவே சென்றுள்ளனர். "ஸ்ரீ லங்கா அரசின், இராணுவ சாகசம் பெரும் அழிவில் முடியப் போகின்றது" எனவும் அப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஆனையிறவு முகாமின் கிழக்குப் பகுதி முற்றுகையை விடுதலைப் புலிகள் தளர்த்தியது, உத்திரீதியான தந்திர நகர்வு என்றே கருத வேண்டும். முகாமின் தெற்கு, வடக்கு, மேற்குப் புறங்களில் முகாமின் வெளிப்புறத்தில், நேருக்கு நேரான கைகலப்புகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. கடும் சண்டைகள் நடைபெறுகின்றன. இதுவரை விடுதலைப்புலிகளின் தரப்பில் 400 க்கு மேற்பட்டோர் களத்தில் வீரமரணம் அடைந்துள்ளனர். இன்னும் ஹெலிகொப்டர்கள் இறங்கமுடியவில்லை. ஸ்ரீ லங்காவின் 8000 இராணுவத்தினரும் மீண்டும் பெரும் அழிவுகளுடன் வந்தவழியே வெற்றிகரமாக பின்வாங்க வேண்டும். அல்லாது போனால் பொறிக்குள் அகப்பட்ட எலிகளைப் போல் அங்கே முழுவதுமாக அழிக்கப்படுவர். அல்லது சரண் அடைய வேண்டும். ஒரே மார்க்கமான கடல் வழிப்பாதையைத் தடைசெய்வதற்கும், கடற்படையினரோடு மோதுவதற்கும் கடற்புலிகளின் பெரும் அணி கிழக்கு கடற்கரையோரத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. விநியோகத் தொடர்கள் மீது தாக்குதல்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இந்த நிலையில், உதவிப் படைகளோ, விநியோகங்களோ, தடைப்படுத்தப்பட்ட நிலையில், ஆனையிறவு முகாமின் வீழ்ச்சியோ, அங்கு அகப்பட்டிருக்கும் இராணுவத்தினர் அழிக்கப்படுவதோ நிச்சயமாயினும், எப்போது என்பதே கேள்விக்குறியாக உள்ளது. விடுதலைப் புலிகளின் பேச்சாளர் குறிப்பிட்டது போல் ஆனையிறவுக்கான சண்டை முடியவில்லை; இது எமது மண்ணில் ஸ்ரீ லங்கா இராணுவ ஆக்கிரமிப்பின் முடிவுக்கான ஆரம்பமாகும். ●

## உங்களின் கவனத்திற்கு..

**கருத்தோட்டமுள்ள, ஆரோக்கியமான கதைகள், கட்டுரைகள், கவிதைகள் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன.**

**உங்கள் ஆக்கங்கள் ஆசிரியர் குழுவின் ஆய்விற்கு உட்படுத்தப்படும்.**

**"கேள்வி பதில்" பகுதிக்கான கேள்விகள் மாதத்தின் நடுப்பகுதிக்கு முன்பு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.**

**"எரிமலை" இதழ் தொடர்பான உங்களது ஆக்கபூர்வமான விமர்சனங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.**

*** உங்கள் பத்திரிகையை நெறிப்படுத்த வேண்டிய கடமை உங்களதே ***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# புனித யாத்திரை

அம்மா!
எங்கள் மண்ணிலே,
பள்ளி சென்றதும், பாதையில் வரும்
வெள்ளம் மீதிலே கல்லெறிந்ததும்
துள்ளி ஓடியே தும்பி பிடித்ததும்
நின்று போனது

வானம் பாடியின் கானம் மறைந்தது
வசந்த காலத்தின் கோலம் அழிந்தது
பேரினவாதப் பெரும்புயல் வீசியெம்
தேசத்தின் கற்பையே சூறையாடிற்று

அகர முதல எழுத்தெல்லாம்
எழுதப் பழகிய எங்கள் மண்
உடும்பு பிடித்து ஊர்ந்து சென்று
தவழ்ந்து வளர்ந்த தாயகமண்

மண்வீடு கட்டி மகிழ்ந்து விளையாடிய மண்
கிளித்தட்டும் தாச்சியும் கிட்டிப்புள்ளும்
கண்டு களித்த மண்

எனதருமைத் தாயே
புனித யாத்திரை ஒன்றிற்காய்
புறப்படுகிறேன் உன் புதல்வன்,
வழியனுப்பி வைப்பாய்
வாயார வாழ்த்தியே

எங்கள் தாய்மண் ஏங்கி அழுதது
எனக்குள் ஓர்குரல் ஓங்கி ஒலித்தது

குளிரும் போது போர்வையுள்
குறுகி முடங்கும் இவனா போனான்
தாயின் சேலையின் பின்னே தானோடித் திரிந்தவன்
தாலாட்டுப் பாடல் மறந்திடாதவன்
தாயழுதால் தானழுதவன்
இவனா போனான் என்பாய்

எங்கள் தாய்மண் ஏங்கி அழுதது
எனக்குள் ஓர் குரல் ஓங்கி ஒலித்தது

பச்சை வயல்கள் பூத்துக் குலுங்கவும்
தென்றல் காற்று தேசத்தை வருடவும்
சல சலவென்று ஆறுகள் ஓடவும்
பாட மறந்த குயில்கள் பாடவும்
இறுகிய முகங்களில் இனிமை பிறக்கவும்

புறப்படுகிறான் உன் புதல்வன்
வழி அனுப்பி வைப்பாய்
வாயார வாழ்த்தியே


எங்கள் தாய்மண் ஏங்கி அழுதது
எனக்குள் ஓர் குரல் ஓங்கி ஒலித்தது.

நன்றி
தமிழீழ மாணவர்

www.tamilarangam.net



# பிரேமதாசா - சமாதானம் - ஒடுக்குமுறை



பிரேமதாசா

தமிழீழ விடுதலைப் போராட்டம் கூர்மையடைந்துள்ள இன்றைய காலகட்டத்தில், சிங்கள பௌத்த இனவாதத்திற்கு இன்று தலைமை தாங்கும் ஸ்ரீ லங்கா ஜனாதிபதி பிரேமதாசாவினைப் பற்றி நாம் சரியாக விளங்கிக் கொள்ளல் அவசியமானதாகும். ஜனாதிபதி பிரேமதாசாவின் இராஜதந்திர அணுகுமுறை எத்தகையது? மிகச்சிறந்த இராஜதந்திரி என பலராலும் கணிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிலிருந்து பிரேமதாசா எவ்வாறு வேறுபடுகின்றார் போன்ற விடயங்களை புரிந்து கொள்ளல், பிரேமதாசா மாயையினைப் போக்க பெரிதும் துணைபுரியும். மிக விரிவாக எழுதப்பட வேண்டிய இவ்விடயங்களை மிகச் சுருக்கமாக இக்கட்டுரையில் நோக்குவோம்.

**பிரேமதாசாவும் சமாதானமும்**

பிரேமதாசாவின் இராஜதந்திர அணுகுமுறையின் உயிர் நாடியே **'சமாதான'** முன்னெடுப்பாகும். இதனால் சமாதானத்தை விரும்பும் ஜனாதிபதி என்ற அபிப்பிராயம் பிரேமதாசா தொடர்பாக பலர் மத்தியில் ஏற்பட்டிருக்கின்றது.

ஆனால், உண்மையாக பிரேமதாசாவின் அகராதியில் சமாதானம் என்ற சொல் கொண்டிருக்கும் அர்த்தம் தான் என்ன?

இதனை நாம் புரிந்து கொண்டால் தான் பிரேமதாசாவின் இன்றைய செயற்பாடுகளுக்கான உண்மைக் காரணங்களை விளங்கிக் கொள்ள முடியும்.

தனது அரசியல் எதிர்ப்பாளர்களை மௌனமாக்குவது; அதன் மூலம் தனக்கெதிரான கிளர்ச்சிகள் ஏற்படாமல் பாதுகாப்பது; இதனை அமைதி, சமாதானம் என அழைத்துக் கொளளுவது இவையே பிரேமதாசாவின் சமாதானம் குறித்த செயற்பாடாக நாம் கருதமுடியும்.

இந்த **'மௌனமாக்கலுக்கு'** பிரேமதாசா இருவழிகளைப் பயன் படுத்திக் கொள்கின்றார்.

*(1) பேச்சுவார்த்தைகள் மூலம் அரசியல் எதிர்பார்ப்பாளர்களை மௌனமாக்குவது;*

*(2) இராணுவ அடக்குமுறை மூலம் இதனை மேற்கொள்ளுவது.*

இவ் இருவழிவகைகளையும் பயன் படுத்தி தனது அரசியல் அதிகாரத்தைப் பாதுகாத்துக் கொள்வதனையும் சிங்கள பௌத்த ஆதிக்கத்தைப் பேணிக் கொள்வதனையும் தனது இலக்காகக் கொண்டு பிரேமதாசா செயற்பட்டு வருகின்றார்.

**பேச்சுவார்த்தை - பிரேமதாசா பாணி**

இவ் இரு அணுகு முறைகளில் முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட பேச்சுவார்த்தைகள் தொடர்பாக கவர்ச்சிகரமான அறிவித்தல்களை விடுவிப்பது பிரேமதாசாவின் இராஜதந்திர நகர்வின் ஓரம்சமாகும். ஆயுதமேந்தி போராடுபவர்களின் பக்கம் உள்ள **'மனக்குறைகளை'** அல்லது **'பிரச்சனைகளை'** சமாதான வழிமூலம் தீர்த்துக் கொள்ளலாம் எனவும் போராடுபவர்களின் உணர்வுகளை தாம் புரிந்து கொள்ள வேண்டுமென்ற ரீதியாகவும் இவரது சமாதான அழைப்புக்கள் அமையும்.

அதே வேளை, இச்சமாதான அழைப்புக்கள் தனது நலன்களைப் பேணிக் கொள்வதற்கான தந்திரோபாயமாகவே பிரேமதாசா பயன் படுத்திக் கொள்வார்.

உதாரணமாக J. V. P. யினரின் போராட்டம் தீவிரமடைந்திருந்த வேளை பேச்சுவார்த்தைக்கு வருமாறு J. V. P. யினரை நோக்கி பிரேமதாசா விடுத்த அறிவித்தலைக் குறிப்பிடலாம். இப் பேச்சுவார்த்தை அழைப்பினை J. V. P. யினர் நிராகரித்தமை பிரேமதாசாவின் **'சமாதான மாயையினை'** நிலை நிறுத்தத் துணைபோயிற்று.

**திசை திருப்பும் நாடகம்**

மேலும், தான் தீர்க்க வேண்டிய பிரச்சனையைத் திசை திருப்புவதும் பிரேமதாசாவின் இராஜதந்திரத்தின் மற்றுமோர் முக்கிய அம்சமாகும்.

இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கான திட்டத்தைத் தயாரித்துத் தரும்படி தமிழ் குழுக்களிடமும் முஸ்லீம் கட்சிகளிடமும் பிரேமதாசா கேட்டிருந்தார். இதன் மூலம் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணவேண்டிய தனது பொறுப்பிலிருந்து விடுபட முயற்சிப்பதுடன் தமிழ் -முஸ்லீம் முரண்பாடுகளைத் தூண்டி விடுவதன் மூலம் எரியும் வீட்டில் கொள்ளி பிடுங்கும் அணுகுமுறையினையும் கைக் கொள்ளுகின்றார்.

***எதிர்க்கட்சிகளை 'அணைத்தல்'***

தன் மீது சுமத்தப்படும் நெருக்கடிகளைத் தணிப்பதற்கு பிரேமதாசா கைக் கொள்ளும் மற்றுமோர் தந்திரோபாயம், எதிர்க்கட்சிகளை அரவணைத்துச் செல்வது போல் பாசாங்கு செய்வதாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





ஜே. ஆர். ஜெயவர்த்தனா

உதாரணமாக J. V. P. இன் செயற்பாடுகளால் அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டபோது எதிர்க்கட்சிகளை உள்ளடக்கிய தேசிய அரசாங்கம் அமைக்கப் போவது போன்ற பிரமையினை எதிர்க்கட்சிகள் மத்தியில் பிரேமதாசா உருவாக்கியிருந்தார். மிகக் கொடூரமான மனித உரிமை மீறல்கள் மூலம் J. V. P. யின் எழுச்சி **'அடக்கப்பட்டதும்'** தேசிய அரசாங்கம் தொடர்பாக எவ்வித பேச்சுமே அரசு தரப்பிலிருந்து எழவில்லை.

தற்போதும் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கு சர்வகட்சி மகாநாடு, மற்றும் பாராளுமன்றத் தேர்வுக் குழு போன்றவற்றைப் பயன்படுத்தி எதிர்க்கட்சிகளையும் இனப்பிரச்சனைக்கு தீர்வு காணும் நடைமுறைக்கு உட்படுத்துவது போன்ற நிலைமையினை ஏற்படுத்தி வருகின்றார்.

இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கென ஏதாவது திட்டங்கள் முன்வைக்கப்படின் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பை தனக்குச் சாதகமாகக் கையாளுவதற்காகவே இந் நடைமுறையினை பிரேமதாசா பின்பற்றுகின்றார்.

## இராணுவ ஒடுக்கு முறை

அமைதி, சமாதானம் என்ற பெயரில் தனது அரசியல் எதிர்ப்பாளர்களை மௌனமாக்குவதோடு பிரச்சனைகள் ஏற்படும் போது மிகக் கொடூரமான ஒடுக்குமுறைகளின் மூலம் தனது இலக்கை அடைந்து கொள்வதற்கு பிரேமதாசா என்றுமே பின்னின்றதில்லை.

உதாரணமாக தென்னிலங்கையில் J. V. P. யின் கிளர்ச்சிகளை அடக்குவதற்கு பேச்சுவார்த்தைக்கான அழைப்புக்களை விட்டு வந்த அதே நேரம் மிகக் கொடூரமான, சட்ட வரையறைக்கும் அப்பாற்பட்ட விதத்தில் இராணுவ நடவடிக்கையினை மேற்கொள்வதற்கும் பிரேமதாசா ஆணையிட்டிருந்தார். இவ் இராணுவ நடவடிக்கைகளின் விளைவாக 60, 000 க்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டதோடு J. V. P. யும் தற்காலிகமாக **'மௌனமாக்கப்பட்டு'** அமைதி(?) திரும்பியது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை நசுக்குவதற்கு சமாதானம், அமைதி என்ற போர்வையினை ஒரு புறமும் மிகக் கொடூரமான ஒடுக்கு முறையினை மறுபக்கமுமாகக் கொண்ட இரட்டைத் தன்மைத் திட்டத்தினை பிரேமதாசா பயன்படுத்தி வருகின்றார்.

## ஜே. ஆரும் பிரேமதாசாவும்

மிகச்சிறந்த இராஜதந்திரி எனப் பலராலும் வர்ணிக்கப்படும் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தனாவினை மிஞ்சக் கூடிய வகையில் பிரேமதாசா செயற்பட்டு வருகின்றார் என்று கூறக் கூடிய அளவுக்கு அவரது செயற்பாடுகள் அமைந்துள்ளன.

சமாதானத்தை விரும்பும் ஒரு ஜனாதிபதி என்ற மாயையினை ஜே. ஆரினால் ஒரு போதும் ஏற்படுத்த முடியவில்லை. பல்வேறு தந்திரங்களைப் பயன்படுத்தி தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்கும் திட்டத்தினையே ஜே. ஆர். மேற்கொண்டு வந்தமையினை சர்வதேசமுமே அறிந்திருந்தது.

ஆனால், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் நோக்குடன் செயற்பட்டு வரும் பிரேமதாசாவினால், தனது இனத்தைச் சேர்ந்த இளைஞர்களில் 60, 000 க்கும் மேற்பட்டவர்களை கொன்றொழித்த பிரேமதாசாவினால், சமாதானத்தின் பிதாமகர் என்ற மாயை நிலையினை தக்க வைத்துக் கொள்ள முடிந்திருக்கின்றது.

இதற்குக் காரணம் பிரேமதாசாவின் திட்டமிட்ட செயற்பாடுகளே. ஒடுக்குமுறையினை செயற்படுத்தும் பொறுப்பினை வேறொருவரிடம் கையளித்துவிட்டு, சமாதானத்திற்கான அழைப்பினையும் விருப்பத்தினையும் வெளிப்படுத்தும் பணியினை மட்டும் தான் செய்து வருகின்ற ஓர் செயற்பாட்டை பிரேமதாசா திட்டமிட்டு கையாண்டு வருகின்றார். ஒடுக்குமுறையினை செயற்படுத்தும் பொறுப்பினை முன்னர் ரஞ்சன் விஜயரத்தினாவிடமும் அவரின் மரணத்தின் பின் சிறில் ரணத்துங்காவிடமும் பிரேமதாசா கையளித்துள்ளார்.

பிரேமதாசாவின் சமாதான முகமூடியினைக் கிழிக்க வேண்டியது தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் செயற்பாடுகளில் ஒன்றாக அமைதல் வேண்டும். இவ்வருடம் தை மாதம் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட சமாதான முன்னெடுப்பின் பின்னர் பிரேமதாசாவின் சமாதான முகமூடி கிழியத் தொடங்கியுள்ளது. போலிச் சமாதானவாதி பிரேமதாசா சர்வதேச அரங்கில் அவமானப்பட்டு நிற்கும் நாள் வெகு தூரமில்லை.

[redacted]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உதிக்கும் திசை நோக்கி உன்னத பயணம்...



**விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் திரு. மாத்தையாவின் கிழக்கு மாகாணப் பயணத்தின் போது, அவரோடு அவரது பயணத்தில் பங்கெடுத்துக்கொண்ட பத்திரிகையாளர் ஒருவரின் பயணக் கட்டுரையில் இருந்து.....**

திரு. கருணா அவர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் அரசியற் பொறுப்பாளர் திரு. கரிகாலன் அவர்கள் வந்து சேர்ந்தார். அதைத் தொடர்ந்து அவர்கள் இருவரும் திரு. மாத்தயாவுடன் மட்டக்களப்பு நிலைமைகள் பற்றிக் கலந்துரையாடினர். பல்வேறு முக்கியஸ்தர்களும் வந்து மாத்தயாவைச் சந்தித்தனர். அகதிகள் பற்றிய விடயங்களை கேள்வியுற்ற திரு. மாத்தயா இந்த விடயங்களை திரு. கிட்டு அவர்களுக்கு தெரியப்படுத்தி, அவர் மூலமாக இந்த விடயங்களை வெளியுலகத்திற்கு தெரியப்படுத்தும் முயற்சிகள் பலவற்றை மேற்கொண்டார். அத்துடன் அகதிகளின் நிலைமையை வீடியோவினாலும், புகைப்படக் கமராவினாலும் படமெடுத்து அவர்களின் அவலத்தை ஏனைய மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும், அவர்களுக்கு ஏதோ ஒரு விதத்தில் உதவிகள் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கூறினார்.

மாத்தயாவின் வேண்டுகோளின்படி **2.10.90** அன்று பிற்பகல் 4 மணியளவில் அகதிகளின் நிலையைப் படமாக்கவும், அவர்களைப் பேட்டி கண்டு நிலைமைகளை அறியவும் ஒரு குழு புறப்பட்டது. மட்டக்களப்பு மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. கரிகாலன் அவர்கள் இக்குழுவுக்குத் தலைமை தாங்கினார். லான்ட் குறோசரில் புறப்பட்ட இக்குழுவுடன் நானும் தொற்றிக் கொண்டேன். முதலில் வந்தாறு மூலையிலிருந்து ஐந்து மைல் தொலைவிலுள்ள பொத்தானை வடிச்சல் என்னும் பகுதியை அடைந்தோம். பொத்தானை என்னும் பகுதியில் உயரமான பகுதி பொத்தானைத் திடல் என்றும் அங்கிருந்து மழை நீர் வடிந்து ஆற்றுடன் சேரும் இந்தப்பகுதி பொத்தானை வடிச்சல் என்றும் அழைக்கப்படும் என அறிந்து கொண்டோம்.

அங்கே புதிதாக குடிசைகள் அமைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. பலர் காட்டை வெட்டித் துப்பரவு செய்து கொண்டிருந்தனர். அகதிகளாக வருவோர் தண்ணீர் வசதியைக் கருத்திற் கொண்டு ஆற்றங்கரைகளை அண்டிய பகுதிகளாக தமது குடியிருப்புக்களை அமைத்துக் கொள்கிறார்கள் என்பதை உணர முடிந்தது. ஒரு வெட்டவெளியில் அடுப்பு எரிந்து கொண்டிருந்தது. முடி நரைத்து, முகம் காய்ந்த ஒரு வயோதிபர் அங்கே காணப்பட்டார். மரநிழலில் ஒரு குழந்தை நிர்வாண நிலையில் படுத்திருந்தது. குழந்தை படுத்திருந்த சூழலை அவதானித்தேன். சாப்பாட்டில் ஈக்கள் மொய்த்துக் காணப்பட்டன. வயோதிபரிடம் "நீங்கள் எந்த ஊர் என்று கேட்டேன்." குடிசை அமைக்கும் வேலையைத் தொடர்ந்தவாறே "வந்தாறுமூலை" என்றார். அவர்களின் நிலையைப் பார்த்த நான் அவர்களைத் தொந்தரவு செய்ய விரும்பவில்லை. அங்கிருந்த ஒரு இளைஞரிடம் இங்கு எத்தனை குடும்பங்கள் உண்டு என்றேன். "பதினைந்து" என்றார். காடும், பற்றைகளும், ஆறும் சேர்ந்த இந்த இடம் நுளம்புகளின் உற்பத்தி ஸ்தானம் ஆக விளங்கும். இங்கு எப்படித்தான் இருக்கப் போகிறார்களோ என்று நினைத்தபடியே புறப்பட்டேன். அப்போது எனக்குத் தெரியவில்லை, இது சாதாரண காட்சி. இனிக் காணப்போகும் காட்சிகள் இதைவிட அவலமான காட்சிகள் என்று.

சாரதியின் ஆசனத்தில் இருந்த கரிகாலனிடம் சென்றேன். "இந்த இடத்தில் இப்படி இருக்கின்றார்களே; இங்கு மலேரியா போன்ற நோய்கள் தொற்ற வாய்ப்பு உண்டல்லவா?" என்று கேட்டேன். "இந்த நிலையைப் பரவாயில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இனிவரும் காலம் மழைக்காலமாகும். அந்தக் காலத்தில் இந்த மக்கள் இன்னும் துயரத்தைச் சந்திக்கப் போகிறார்கள்" என்று வேதனையுடன் கூறியவாறே லாண்ட் குறோசரை செலுத்தத் தொடங்கினார்.

மைலவெட்டுவான்என்ற பகுதியை அடைந்தோம். தூரத்தில் இருந்து பார்த்தபோது திருவிழாக் கூட்டம் போல் தெரிந்தது. எனக்குப் புதினமாக இருந்தது. ஏனென்றால் நான் ஏற்கனவே இந்த வீதிகளால் பயணம் செய்தவன். வயல்வேலைகள் நடைபெறும் காலம் தவிர ஏனைய காலங்களில் இந்த வீதியில் சனநடமாட்டத்தைக் காண முடியாது. எப்போதாவது ஓரிரு சைக்கிள்கள் வரும். அப்படியான இந்தப்பகுதி சனக்கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. இதுதான் மைலவெட்டுவான் வேல்ட் மாக்கற் (உலகச்சந்தை) என்றார் கரிகாலன். பிரபலமான ஆலயத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திருவிழாவின் போது கடைகள் எவ்வாறு காணப்படுமோ அப்படியிருந்தது. வீதியின் இருமருங்கும் எண்ணற்ற கடைகள் முளைத்திருந்தன. சைக்கிள் கடைகள், ரொட்டிக் கடைகள், சலூன், மீன்-கருவாட்டுக் கடைகள், மரக்கறிக் கடைகள், பலசரக்குக் கடைகள் என பல கடைகளும் காணப்பட்டன. இந்தப் புதிய சந்தையை அண்டிய ஒரு குடிசையை நோக்கிப் போனோம்.

ஒரு மரத்தின் கீழ் சிலர் இருந்தார்கள். அவர்களை நெருங்கினோம். கையில் கைக்குழந்தையுடன் ஒரு இளம்பெண் இருந்தார். வெறித்த பார்வை. "அக்கா உங்கள் கணவர் எங்கே?" என்றேன். நிமிர்ந்து பார்த்தார். கண்ணீர் பொலபொல வெனக் கொட்டியது. "கொள்ளையில் போவானுகள் கொண்டு போயிட்டானுகளே" என்று அருகில் இருந்த கிழவி ஓலமிட்டாள். இவர்கள் ஏதோ ஒரு விதத்தில் பாதிக்கப்பட்டவர்கள் என்பதை உடன் புரிந்துகொண்டேன். அந்தக் கைக்குழந்தையைக் கவனித்தேன். அதிர்ச்சியாக இருந்தது எனக்கு. பல சர்வதேச சஞ்சிகைகளில் பார்த்த அவலத்துக் எடுத்துக்காட்டான குழந்தைகளை ஒத்த தோற்றம் அந்தக் குழந்தையின் தோற்றம். மெலிந்து, கறுத்துப் பார்க்கப் பயங்கரமான, தலைக்கேற்ற உடல் அமையாத.... அதை வார்த்தையில் வர்ணிப்பது கஷ்டம். எத்தியோப்பியா அல்லது பயாவ்றாவில் தான் நிற்கிறோமா என்று கூட எண்ணினேன். கிழக்கின் முழு அவலத்துக்கும் இந்தக் குழந்தையின் உருவம் ஒன்றே போதும். நானும் ஒரு குழந்தையின் தந்தை என்பதால் தானோ என்னவோ இந்தக்காட்சி என்னை மிகவும் பாதித்தது. அன்றிரவு முழுக்க அந்தக் குழந்தையின் தோற்றம் நெஞ்சைப் பிசைந்தது.

தொடரும்.....



# கடலும் அதன் வளங்களும்

**கட்டுரைத் தொடர் - 4**

கடலில் இருந்து பெறக்கூடியவற்றில் கடல்நீரில் இருந்தும் கடல் தரையில் இருந்தும் பெறக்கூடியவற்றை பற்றி இதற்கு முன்னர் நாம் அறிந்திருந்தோம். அடுத்து கடல்நீரில் வாழும் உயிரினங்களைப்பற்றி நாம் இங்கு பார்ப்போம்.

பூமி தோன்றியதிலிருந்து ஏற்பட்டு வரும் மாற்றங்களில், உயிரினங்களின் தோற்றமும், அவற்றின் பரிணாம வளர்ச்சியும் கடலிலிருந்தே ஆரம்பமாகியது என பல உயிரியல், கடலியல் ஆராய்ச்சியாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். உயிரினங்களைப் படைத்தவன் இறைவன் என்று மெய்ஞ்ஞானத்தையும், இயற்கையில் தோன்றும் மாறுதல்களையும் அதனால் ஏற்படும் பரிணாம மாற்றங்களையும், ஆராய்ந்து விதிகளைச் சமர்ப்பிக்கும் விஞ்ஞானத்தையும் பற்றி இங்கு விவாதிக்கவோ அல்லது ஏதாவது ஒன்றை மறுக்கவோ நாம் இங்கு வரவில்லை, நடைமுறைகளைக் கண்கூடாகப் பார்த்தறிந்து கொள்ள வேண்டியது மனிதனின் பகுத்தறியுந்திறன்.

கடல் நீரில் உயிர்கள் தோன்றிய போது ஆரம்பகாலக் கற்களில் பிடித்திருந்த பக்டீறியாக்களின் வளர்ச்சி தான் முதலில் கடலில் தோன்றிய உயிரினமாகும். இவை பின்னர் இயங்கு நிலைக்கு மாறி படிப்படியாக வளர்ச்சி பெற்றன.

கடலில் வாழ்கின்ற உயிரினங்களின் உருவ அமைப்பை வைத்து நாம் மூன்று முக்கிய வகைகளுள் அமைத்துக் கொள்ளலாம்.

www.tamilarangam.net



சதையால் ஆன உயிரினங்கள், சதையும் சதையைச் சுற்றி ஓடுகளும் உள்ள உயிரினங்கள், சதையின் நடுவே முள்ளு அல்லது எலும்பு உள்ள உயிரினங்கள்.

கடலில் உயிரினங்கள் தோன்றிய போது முதலில் வெறும் சதையுள்ள உயிரினங்களாகவே தோன்றின. பின்னர் பின்னர் இவற்றின் மேல் கல்சியம் கலந்த படைகள் வளரத் தொடங்கி ஓடுகள் உண்டாகின. கடற்புற்றுக்கள் கடற்பண்ணாடைகள் ஆகியவை நுண்ணிய சதையுள்ள உயிர்களால் ஆனவை.

இவைகளைத் தவிர கணவாய், நட்சத்திரமீன் வகைகளைப் போன்ற வெறும் சதைகளாலான பெரும் உயிரினங்களும் உண்டு. நாம் இன்று காண்பவற்றைப் போலல்லாது மிகவும் பெரிய பருமனும், தொகையும் உடைய உயிரினங்களாக பலகோடி வருடங்களுக்கு முன் இவை வாழ்ந்துள்ளன. உயிரின வளர்ச்சியின் அடுத்தபடியாக சதையைச் சுற்றி கோதுகளும், ஓடுகளும் உடைய உயிரினங்களின் தோற்றம் ஆகும். இறால் வகைகள், சதையைச் சுற்றி கோதுகள் உள்ள உயிரினங்களுக்கு உதாரணமாகும். கடல் நத்தை, கடற்சிற்பிகள், ஊரிகள் போன்றவை இவற்றிற்கு உதாரணமாகும்.

அடுத்து சதையின் நடுவே முள்ளும், எலும்புகளும் உள்ள உயிரினங்கள் உள்ளன. சதையின் நடுவே முள் உள்ளவை மீன்களும், எலும்புள்ள விலங்கினங்களும் கடலில் வாழ்கின்றன. எலும்புகள் உள்ள உயிரினங்களை (கடல் விலங்குகள்) திமிங்கிலம் இவற்றிற்கு உதாரணமாகும்.

முதலில் இந்தவகை உயிரினங்கள் பூமியில் பாரிய அளவிலும் பெரிய உருத்தோற்றம் உடையனவாயும் பல கோடி வருடங்களின் முன்னர் இருந்துள்ளன. கடலில் ஏற்பட்ட எரிமலைகளின் மிதப்புக்களினாலும் கடற் சூழலின் மாற்றத்தாலும் இவை அழிவுக்குள்ளாகின. இதனால் அநேக உயிரினங்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்து கால வட்டத்தில் அவை அற்றுப் போகும் நிலைக்குள்ளாகியுள்ளன. தரையில் வாழும் அநேக உயிரினங்களும் இத்தகைய ஆபத்திற்கு உள்ளாகியுள்ளன.

ஆனால் கடலில் வாழும் உயிரினங்கள் பலவற்றை மனிதன் தனக்கு உணவாக பாவிக்கின்றான். ஒரு சில பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள் ஒரு சில உயிரினங்களையும், வேறு சில பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள் வேறுசில மீன்களையும் உட்கொள்கின்றனர்.

மேலும் திமிங்கிலம் போன்ற கடல் விலங்குகளைத் தோலுக்கும்; கொழுப்பிலிருந்து எண்ணெய் போன்றவற்றிற்கும் பாவிக்கின்றனர்.

ஆனால் இதேவேளையில் இயற்கையாகவே கூடிய மீன்கள் வாழ்கின்ற பிரதேசங்களை சார்ந்த மக்கள் தமது தேவைக்கு மேலதிகமாக மீன்களை பிடித்து ஏற்றுமதி செய்வதாலும், கூடிய பணவருவாயை அளிக்கக்கூடிய மீன், றால் வகைகளை உற்பத்தி செய்வதாலும் மேலதிக வருவாயை ஈட்டிக் கொள்ளலாம். தமிழீழம் இத்தகை வளங்களைக் கொண்ட ஓர் நாடாகும். இதை மேலும் விருத்தி செய்து உற்பத்தியை பெருக்குவதன் மூலம் நாம் எமது நாட்டை அபிவிருத்தி செய்யக்கூடியதாக இருக்கும். இதே வேளை இவ் மீனினங்கள் அழிந்து போவதற்கு காலாக உள்ள காரணிகளை அறிந்து அவற்றை இல்லாதொழிப்பதன் மூலம், உயிரினங்கள் அழிந்து போவதையும் தடுக்கலாம். இவ் அழிவுகளுக்கு இரு காரணங்கள் உண்டு. ஒன்று இயற்கை, இது சுவாத்திய மாறுதல்களாலும், நீரோட்ட மாற்றங்களாலும் ஏற்படுகின்றது. மற்றது, மீனினங்கள் வாழக்கூடிய சூழ்நிலைகளை அழிப்பது. கடல் நீரையும், படுக்கைககளையும் அசுத்தப்படுத்துவதை நிறுத்துவதன் மூலம் நாம் உயிரின அழிவைத் தடுக்கலாம்.

*கலைஞனுக்கும் மக்களுக்கும் இடையிலுள்ள உறவு ஒரு இரு வழிப் பாதை. அவன் தனக்குத்தான் நம்பிக்கையானவனாகவும் வெற்று விவாதங்களிலிருந்து விடுதலை பெற்றவனாகவும் இருப்பதன் மூலம் புதிய கண்ணோட்டங்களை உருவாக்குகிறான். மக்களின் புரிந்து கொள்ளும் திறனை உயர்த்துகிறான். இதன் விளைவாக ஒரு சமுதாயத்தின் விழிப்புணர்வு வளர்ந்து வருகிறது. அதன்மூலம் ஒரு புதிய கலைஞன் பிறப்பதற்கான வழியை உருவாக்குகிறது.*

— அந்த்ராய் தார்க்கோவ்ஸ்கி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெண்களின் மீதான சமுதாய அழுத்தம்

- குயில் -

"பெண் நிலை வாதம்" என்ற சொற்றொடரைக் கேட்டவுடனேயே பெண்கள் நடுத்தெருவில் அரைகுறை ஆடையுடன் நிற்பதற்கு அல்லது பல ஆண்களுடன் முறையற்ற தொடர்பு கொள்வதற்கு விரும்புகிறார்கள் என்றொரு தவறான எண்ணம் சிலரிடம் ஏற்பட்டு விடுகிறது. இது அவர்களை மன எழுச்சி கொள்ள வைக்கின்றது. "பெண் நிலைவாதம்" பற்றி பேசுகிறவர்கள், எதைப்பேசினாலும் சரி அவர்களை எதிர்க்குமாறு தூண்டுகிறது.

உண்மையில் "பெண்நிலை வாதம்" தொடர்பான பிரச்சனைகள் வேறு. அவை ஆழமானவை. எமது சமுதாயத்தில் ஒழுக்கம், பண்பாடு, கலாச்சாரம் என்பன கட்டாயம் கடுமையாகப் பேணப்பட வேண்டும். குடும்பத்தில் ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்ற நிலை சமுதாயத்தின் ஒழுக்கத்தை பேணுவதற்காக அவசியமாக இருக்க வேண்டும். அத்தகைய உயர்வான எமது மரபுகள் மேற்கத்திய சிந்தனைகளால் எந்த வகையிலும் பாதிக்கப்படக் கூடாது. அதே சமயத்தில் சமுதாயம் பெண்கள் மீது சுற்றியுள்ள அழுத்தங்கள் பற்றி நாம் உரப்பாகச் சிந்திக்க வேண்டும். அவற்றை அகற்ற ஆக்க பூர்வமாகச் செயற்பட வேண்டும்.

"எமது குடும்பங்களில் பூரண அமைதி நிலவுகிறது. பெண்நிலை வாதம் பற்றிப் பேசுகிறவர்கள், இந்த அமைதியைக் குலைத்துப் பெண்களை ஆண்களுக் கெதிராக ஆயுதம் தூக்குமாறு சொல்கிறார்கள்" என்பது இன்னும் சிலருடைய எண்ணம். அதுவும் தவறான எண்ணமே!

தென்னாபிரிக்க கறுப்பின மக்கள் வெள்ளையரைத் தங்கள் எதிரிகள் என்று கருதுகிறார்கள். தமிழன் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டபோது, சிங்கள இனவாத அரசை நாங்கள் எங்கள் எதிரியாக இனங்கண்டோம். அவை வித்தியாசமான போராட்டங்கள்! எதிரியை விட்டுப்பிரிந்து நாங்கள் தனியாக வாழ விரும்புவதைச் செயற்படுத்துவதற்கான போராட்டங்கள். இது அப்படியானதில்லை. "எதிரி" என்ற சொல்லையே இங்கு நாங்கள் பாவிக்க முடியாது.

"பெண்களும் அபிவிருத்தியும், தொடர்பு சாதனங்களும்" என்ற கட்டுரை ஒன்றில் கமலா பாஸின் என்ற பெண்மணி "எங்கள் எதிரி மிகப்பாரமான நிலையில் இருக்கிறான்" என்று சொல்லுவார். வேறு பெண்களும் "எதிரி" என்ற சொல்லைப் பாவிக்கிறார்கள். அப்படிப் பாவித்தாலும் கூட அது ஆண்களை மட்டும் குறிக்காது. பெண்களையும் குறிக்கும். மனித சமுதாயம் வளர்ந்து வந்த பாதையையும் குறிக்கும். மூடநம்பிக்கைகளையும் குறிக்கும். ஆகவே, ஆண்கள் மட்டுமல்ல பெண்நிலை வாதத்தின் எதிரிகள் என்பது மிக முக்கியமான விடயம்.

எப்போதும் ஆண்கள் அமர்ந்துள்ள சபைகளிலேயே "பெண் நிலை வாதம்" பற்றிப் பேசப்படுகிறது. "கண்ணனும் அர்ச்சுனனும் செய்கின்ற போர் ஆயத்தங்கள் பற்றித் துரியோதனன் ஆகியோருக்கு தெரியுமா ?" என்று கேட்டுக், கடோற்கசனைத் தூது அனுப்பிய தருமன் காலத்தில் நாங்கள் வாழவில்லை. ஆகவே எதிரிகளை முன்னால் வைத்துக்கொண்டு இந்தப் பிரச்சினையை நாம் அணுகுகிறோம் என்றால் அவர்களை நாம் "எதிரிகள்" என்று நினைக்கவில்லை என்றுதான் பொருள்!

"ஆண்களுக்கு உலகமே வீடு, பெண்களுக்கு வீடே உலகம்" என்ற கருத்து நிலை மிக இறுக்கமாக எமது சமுதாயத்துக்குள்ளே விதைக்கப்பட்டுள்ளது. பெண்களில் பலர் உணர்வு பூர்வமாகத் தமது தாழ்த்தப்பட்ட நிலையை அங்கீகரிக்கின்றனர். இதுதான் எங்கள் பாதையில் உள்ள மிகச் சிக்கலான நிலை. இந்த நிலை நீங்கினால்தான் எமது விடுதலைப் போராட்டத்திலும் பெண்கள் ஆண்களுக்கு துணையாகத் தோள் கொடுக்க முடியும்.

வீதியில் சென்று கொண்டிருந்த ஒரு பெண் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப் படுகிறாள் என்று வைத்துக் கொள்வோம். பத்திரிகையில் அச்செய்தி வரும்போது "கவர்ச்சியான ஆடையுடன் வீதியில் சென்றபெண் கற்பழிக்கப்பட்டாள்" என்று போடுவார்கள். ஆண் ஒருவன் செய்த குற்றம் மறைக்கப்பட்டு "கவர்ச்சியான ஆடையுடன் சென்றது அவளது பிழை" என்று நினைக்க வைக்கும் தந்திரமான முறை இது. ஒரு பெண் கவர்ச்சியான ஆடை அணிவது எமது பண்பாட்டிற்கு ஒவ்வாதது தான் நிச்சயமாக! ஆனால் ..... எல்லாத் தவறுகளும் அதனால் ஏற்படுகின்றன என்று நினைப்பதும், பெண்ணே தண்டிக்கப்படுவதும் ... பிழையான நிலை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கிளி ஒன்றைக் காணும் போதெல்லாம்... கூட்டையும் சேர்த்தே காட்டிக் கொண்டு வந்தால், குழந்தையானது கிளி எப்போதும் கூட்டிலேயே வாழும் என்ற நினைக்கும். கூட்டிலேயே வாழ்வதுதான் அதன் இயல்பு என்றும் நினைக்கும். தொலைக்காட்சி விளம்பரம் ஒன்றிலே மருந்து ஒன்றைச் சிபாரிசு செய்வதற்கு வைத்தியர் ஒருவர் தேவைப்பட்டால் மறந்தும் ஒரு பெண்வைத்திய நிபுணர் காட்டப்படுவதில்லை. "நூடில்ஸ்" விளம்பரம், "விம்" விளம்பரம், "சவர்க்கார" விளம்பரம் என்றால் அவர்கள் அழகான பெண்களை மறந்து போவதுமில்லை. பெண் என்பவள் சமைக்கவும், வீட்டைப் பராமரிக்கவுமே படைக்கப்பட்டவள் என்ற கருத்தை மிக இயல்பு போலச் சமுதாயத்தில் பதித்து விடுவதில் பொதுஜன தொடர்புச் சாதனங்கள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன! தொலைக்காட்சியில் வரும் பெண் எப்போதும் தன்னலம் கருதாத குடும்பத் தலைவியாக இருக்கவேண்டுமா? தாய் நாட்டைக் காத்த தனிப்பெரும் வீராங்கனையாக இருக்க முடியாதா?



**இன்றைய பெண்கள் நாட்டு நிர்வாகத்தை தம்மால் செய்ய முடியும் என்று நம்புகிறார்கள். நாட்டுக்காக தியாகம் செய்யவும், இனத்துக்காக போராடவும் தம்மால் முடியும் என்றும் நம்புகின்றனர். இன்று அதை பல்லாயிரக் கணக்கானோர் நிரூபிக்கின்றனர்.**

கிளி கூட்டிலே அமைதியாகத்தான் இருக்கும். கூட்டுக்கு வெளியே வானத்தில் பறந்து திரிவதுதான் கிளியின் இயல்பு என்பது சிலருக்குத் தெரிகிறதே! அதுதான் பிரச்சனை.

ஐரோப்பியர் எங்களை ஆண்ட போது எங்களின் பெரும்பான்மையோர் மிக அமைதியாக இருந்தோம். ஆங்கிலம் படித்தோம். அவர்களின் பண்பாடுகளையும் பின்பற்றினோம். இந்திய அமைதிப்படை இருந்தபோதும் நாங்கள் அமைதியாகவே இருந்தோம். ஆகவே "அமைதி" என்பது எப்போதும் சரியானதில்லை.

குடும்பங்களின் அமைதி குலைக்கப்படக் கூடாது என்பதை ஏற்றுக் கொள்வோம். ஆனால் தான் கூட்டுக்கு வெளியே வரவேண்டும் என்பது கிளிக்குத் தெரிய வேண்டும். கிளியை வெளியே விடவேண்டும் என்பது அடைத்து வைத்திருப்பவர்களுக்குப் புரியவேண்டும். அமைதி என்பது இரண்டு வகையில் வரும் என்பது எல்லோருக்கும் விளங்கவேண்டும்.

"உலக சனத்தொகையில் 2/3 பங்கு பெண்களால் ஆன உலகின் மொத்த வருவாயில் 1/10 பங்கு மட்டுமே பெண்களுக்கு வருகிறது. அத்துடன் உலகின் மொத்தச் சொத்துடமையில் 1/100 பங்குக்கும் குறைவான அளவே பெண்களுக்கு உரிமையாக இருக்கிறது."

இது 1980ம் ஆண்டு வெளியிடப்பட்ட ஐ. நா. அறிக்கை தரும் விபரம்.

உலக உணவு உற்பத்தியில் பெண்கள் பெரும்பங்கு வகிக்கின்ற போதிலும், மறந்தும் "விவசாயி" என்ற பிம்பம் பெண்ணுக்குத் தரப்படுவதில்லை.

நிர்வாக சேவையில் பத்து வீதமானவர்களே பெண்களாயிருத்தல் கூடும் என்னும் கட்டுப்பாடு பற்றி நாம் ஆழமாக சிந்திக்க வேண்டிய நிலையில் உள்ளோம். வீட்டு நிர்வாகத்தைக் கட்டாயம் பெண்களே செய்ய வேண்டும் என்ற வற்புறுத்தும் சமுதாயம், நாட்டு நிர்வாகம் செய்ய அவர்கள் லாயக்கற்றவர்கள் என்று எந்த ஆதாரம் கொண்டு தீர்மானிக்கிறது என்பது புரியவில்லை.

வாழ்வில் எந்த ஒரு காரியத்தையும் தன்னால் செய்ய முடியும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்று நம்புகிறவனே இறுதியில் அதைச் செய்து முடிப்பவனாக இருப்பான். இன்றைய பெண்கள் நாட்டு நிர்வாகத்தைத் தம்மால் செய்ய முடியும் என்று நம்புகிறார்கள். நாட்டுக்காக தியாகம் செய்யவும், இனத்துக்காகப் போராடவும் தம்மால் முடியும் என்று நம்புகிறார்கள். இன்று அதை பல்லாயிரக் கணக்கானோர் நிரூபிக்கின்றனர்.

உலகத்தில் பெண்களுக்கு விதிக்கப்பட்ட பொதுவான அடக்கு முறைகளுக்கு மேலாக இந்துமதம் தனிப்படப் பெண்களுக்குச் சில வரம்புகளைக் கட்டியுள்ளது.

இந்து மதக் கொள்கைப்படி பெண்கள் வேத நூல்களைப் படிக்கக் கூடாது. பெண்களுக்கு பூநூல் அணியப்படுவதில்லை, (அண்மையில் ஒரு பெண்ணுக்குப் பூநூல் அணியப்பட்ட செய்தி மிக அதிசயமாகப் பிரசுரமாகியிருக்கிறது பத்திரிகைகளில்) பெண்கள் இறைவனைப் பூஜிக்க உரிமையற்றவர்கள். நீர்க்கடன் செய்வதற்கு எப்போதும் ஆண் சந்ததியினரே உரிமை பெறுவர். இவை எல்லாவற்றிற்கும் மேலாக இந்து மதத்தில் ஒரு பெண் கன்னியாக இருக்க உரிமையில்லை. ஒரு பெண்ணுக்கு நீண்டகாலம் பொருத்தமான கணவன் வாய்க்கவில்லை என்றால், அந்தப்பெண்ணை வாழைமரம் ஒன்றுக்கு மணம் முடித்து அந்த வாழை மரத்தை வெட்டி அவளை கைம்பெண்ணாகச் செய்து கைமைக் கோலத்தில் அவள் வாழ்வுநடத்த அனுமதிக்கப்பட்டாள். இது நாங்கள் நடந்து வந்த பாதை! இந்தப் பாதைகளே எமது முக்கியமான எதிரிகள்.

இன்றைக்கும் திருமணம் என்பது ஒரு ஆண் ஒரு பெண்ணை உடைமையாக்கும் சடங்காகவே நடைபெறுகிறது. சடங்கை ஆழமாக நோக்குபவர்களுக்கு அது புரியும்.

மக்கள் வேட்டையாடித் திரிந்த காலத்திலே பெண் ஒருத்தி ஒரு ஆணினால் பயன்படுத்தப்பட்ட உடனே அதன் அடையாளமாகக் கூரிய கல் ஒன்றினால் அவள் நெற்றியில் குற்றி அந்தக் குருதியை உச்சி தொடங்கும் இடத்தில் இட்டார்களாம். இது தான் இன்றுவரை சிந்தூரச் சடங்கு, குங்குமத் தீற்றல் சடங்கு என்ற பெயரில் இடம் பெறுகிறது. திருமணம் செய்த பெண்கள் நெற்றியிலும், உச்சியிலும் குங்குமம் அணிய வேண்டும் என்ற வழக்கு அந்தப் பாரம்பரியத்தின் எச்சமே!

மஞ்சளும், குங்குமமும் மங்கலப் பொருள்கள் எனக் கூறப்படுகின்றன. அந்த மங்கலத்துக்குப் பின்னால் கணவனின் இழப்பைக் கொடூரமாக்கும் கபடத்தனம் மறைந்திருப்பது சிந்திக்கக் கூடியவர்களுக்குப் புரியும். ஆண்களுக்கு ஏன் இத்தகைய மங்கலப் பொருள்கள் இல்லை? மனைவி இறந்தவுடன் ஏன் அவர்கள் இந்த மங்கலப் பொருள்களை இழந்து போவதில்லை?

எமது சமுதாயத்தில் பெண் பார்த்தல் என்பது மிகவும் கேவலமான ஒரு சடங்கு. உயிருள்ள ஒரு பெண்.... சந்தைக்கு வருகிறாள். ஒரு ஆணுக்கு.... பல பெண்களிடையே ஒரு பெண்ணைத் தெரிவு செய்து மணந்துகொள்ள உரிமை இருக்கிறது. பெண்ணுக்கு ஏன் அந்த உரிமை மறுக்கப் படுகிறது.

"சீதனம்" என்ற பிசாசு சமுதாயத்தில் பெண்கள் மீது ஏற்படுத்தியிருக்கும் தாக்கம் எல்லாருக்கும் தெரிந்த ஒன்றுதான். ஈழத்தமிழனின் பண்பாட்டில் மிகக் கறைபடிந்த அத்தியாயம் இது. சீதனப் பிசாசு திருமணத்தை எதிர்பார்க்கும் பெண்களை சித்திரவதை செய்வது பழங்கதை. திருமணம் முடிந்த பெண்களை வேறு வேறு வடிவங்களில் தாக்குவது அரைப் பழசான கதை! ஆனால் அது கருவில் இருக்கும் பெண் குழந்தைகளையும், மண்ணில் பிறந்த "உடன்பச்சை" பெண்சிசுக்களையும் மரணதண்டனைக்கு உட்படுத்துவது புதிய கதை.

கருவில் இருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என அறிந்து கொள்ளச் செய்யப்படும் ஒரு சோதனை "அம்னியோ சென்ரசிஸ்" எனப்படும். 1978 -1988க்கு இடைப்பட்ட காலத்தில் இச் சோதனையைச் செய்து பார்த்ததனால் சிதைக்கப்பட்ட பெண் கருக்கள் 78,000 என்று இந்திய சஞ்சிகை ஒன்று கூறுகிறது. இந்த நிலை எமது நாட்டுக்கு வரக்கூடாது!

எமது நாட்டிலே ஒரு பெண்ணின் 55 வருட வாழ்வெல்லையிலே 15 வருடகாலம் சமையல் செய்வதிலேயே கழித்து விடுவதாய் ஓர் ஆய்வாளர் கூறுகிறார். ஆனால் அந்த உழைப்பு உழைப்பாகக் கருதப்படுவதில்லை. ஏன்? பெண்ணுடைய எந்த உழைப்புமே உழைப்பாகக் கருதப்படுவதில்லை. வீட்டிலே அவள் செய்யும் வேலை எல்லாம் "கடமை" என்ற சொல்லுக்குள் அடங்கிவிடும். வீட்டிலே பெண் செய்யும் சமையல், சலவைத் தொழில், பிள்ளைகளுக்கு பாடம் சொல்லித்தரும் உழைப்பு எல்லாம் கடமை! வெளியிலே அவை ஆண்களால் செய்யப்பட்டால் அவற்றுக்குக் கூலி தரப்பட வேண்டும்! ஆகவே பால் அடிப்படையில் அமைந்த தொழிற் பாகுபாடு நீக்கப்பட வேண்டும் என்பது மட்டுமல்ல...... ஒரு பெண் செய்யும் தொழில்களுக்கெல்லாம் உரிய கூலி வழங்கப்பட வேண்டும்.

இலங்கையின் சுதந்திர வர்த்தக வலயத்திலே வெளிநாட்டு நிறுவனங்கள் பெண் தொழிலாளர்களையே அதிகம் பயன்படுத்த விரும்புகின்றன. குறைந்த சம்பளத்துடன் வேலை வாங்கலாம் என்பதே நோக்கமாகும். மலைநாட்டிலே பெண் தொழிலாளருக்குச் சமசம்பளம் வழங்கப்படுவதில்லை என்ற கோஷம் பழையது; ஆனால் இன்னும் தீர்க்கப்படாதது.

தொழிலுக்காக வெளிநாடு செல்பவர்கள் தொடர்பான தரவுகளை ஆராய்ந்தால் ஓர் உண்மை தெரி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யவரும். வெளிநாடுகளில் குறைந்ததர வேலைகளைச் செய்யச் செல்பவர்களில் பெண்களின் நூற்று வீதம் அதிகமானது. 'பணிப்பெண்கள் போல்' என்பதே கசப்பான அந்த உண்மையாகும்.

சோஷலிச நாடுகள் வேலை செய்யும் பெண்களுக்குப் பதினைந்து வாரப் பிரசவ லீவு வழங்குகின்றன. இங்கு பன்னிரண்டு வாரம் லீவு வழங்கப்படுதல் கூடக் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதே தவிர நடைமுறைக்கு செம்மையாக வரவில்லை இன்னும்!

"பெண்களுக்கு இரகசியம் கூறக் கூடாது. அவர்கள் எதையும் நாலுபேருக்குச் சொல்லிவிட்டுத் தான் வேறுவேலை பார்ப்பார்கள். பெண்ணுக்கு ஆசை அதிகம்; அவளிடம் பணத்தை நம்பிக் கொடுக்க முடியாது" என்று சமுதாயம் நம்புகிறது. பெண்களிடம் மட்டும்தான் இக்குணம் உள்ளது என்ற நம்பிக்கைக்கு எந்த ஆதாரங்களும் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி இருந்தால் அது பெண்ணின் உணர்வுகளும், மன எழுச்சிகளும் அடக்கப்பட்டு வெளித் தொடர்புகள் இல்லாது, அறிவு விருத்தியடையாததன் விளைவுகளாகவே இருக்கும்.

பெண்கள் மீது உபயோகப்படுத்தப்படும் பலாத்காரம் தொடர்பாக இன்னொரு விடயத்தை குறிப்பிட வேண்டும். எமது நீதிமன்றங்களில் பலாத்கார வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தால்..... பெண் தன்னுடைய சம்மதமின்மையை அங்கு நிரூபிக்க வேண்டும். இது மிக விசித்திரமான ஒரு எதிர்பார்ப்பு! பலாத்கார விடயங்களில் எதிர்ப்பை உடல் ரீதியில் காட்டுவது.... கொலை நடைபெறவே வழிவகுக்கும் என்பது வைத்தியர்களின் அபிப்பிராயம்! ஆகவே ஒரு பெண்ணை ஒரு ஆண் பலாத்காரம் செய்ய விரும்பினால் அவள் ஒன்றில் அதை எதிர்த்து இறந்துபோக வேண்டும். அல்லது உடன்பட்டு அவனோடு போய்விட வேண்டும் என்பது தான் சட்டமும் சமுதாயமும் எதிர்பார்க்கும் விடயங்களா?

குடும்பக் கட்டுப்பாடு என்பது குடும்பத்தின் நன்மைக்காகவும், நாட்டின் நன்மைக்காகவும் செய்யப்படும் ஒரு நடவடிக்கை. ஆனால் அது தன் சுமையை முற்றாகவே பெண்களில் இறக்கிவிட்டிருப்பது எல்லாரும் அறிந்த விடயம். குடும்பக் கட்டுப்பாடு ஆலோசனைகளை ஆண்கள் அனுசரிப்பது மிக அருமை.

பெண்களுக்கு இந்துமதக் குருமார் வழங்கும் வழமையான ஆசிகளில் ஒன்று... "தசாஸ் யாம் புத்ரனான் தேஹி.. பதிம் ஏகாதசம் க்ருதி..." என்பதாகும். "நீ பத்து ஆண்குழந்தைகளைப் பெறுவாய். பின்னர் பதினொராவதாக உன் கணவனை உன் குழந்தைபோலப் பேணுவாய்" என்பது இதன் பொருள். அவனைக் குழந்தை போலப் பேண அவள்! அவளைக் கவனிப்பது யார்?

திருமண வீட்டிற்கும், கோயில் திருவிழாக்களுக்கும் போகும் போது தமது மனைவியரைத் தவறாமல் அழைத்துச் செல்லும் ஆண்கள் பலர் அறிவியல் நிகழ்சிகள், இலக்கியக் கலந்துரையாடல்கள், பொது விடயங்கள், சமூகப்பணிகள் போன்றவை தொடர்பாகத் தாம் செல்லும்போது பெண்களை அழைத்துச் செல்வதில்லை. பெண்களும் போக விரும்புவதில்லை, இது சிந்திக்கப் பட வேண்டிய விடயம்!

பெண்கள் மீது இவ்வளவு அழுத்தங்களை ஏற்படுத்தும் சமுதாயம் பெண்களைத் தெய்வமாக வழிபட வேண்டும் என்று கூறுவது வியப்பானது என்று சிலர் கூறுவர். இந்த நடவடிக்கை "றீயாக்சன் போமேசன்" (Reaction formation) என்று உளவியலாளர்களால் கூறப்படும். மனிதர்கள் தமக்குள்ளே செயற்படும் ஒரு உந்துதலை மறைப்பதற்கு அதன் எதிரான உந்துதலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பர். இறந்து போகவேண்டும் என்று விரும்புகிற ஒரு நோயாளியை அதீதமாகக் கவனிப்பது இதே போன்ற ஒரு நடவடிக்கை.

பூமியை பூமாதேவி என்று அழைப்பதும், கல்விக்குத் தெய்வம் சரஸ்வதி என்பதும், வீரத்தின் கடவுள் துர்க்கை என்பதும் "ரியாக்சன் போமேசன்" நடவடிக்கைகளே! வீரத்தின் தெய்வம் ஒரு பெண் என்பதைச் சமுதாயம் உண்மையிலேயே நம்புமாயின் எமது பெண்களை வீராங்கனைகளாகக் காண்பதற்கு மட்டும் ஏன் அது தயங்க வேண்டும்?

ஆதிசங்கரர் வரலாற்றிலே சரஸவாணியைத் தெய்வமாக்கினார்கள். மண்டனமிசிரர் ஆதிசங்கரரோடு வாதிட்டுத் தோற்றார் பிறகு... ஆதி சங்கரருடன் வாதிட்ட சரஸவாணியை வெற்றி கொள்ள ஆதிசங்கரரால் முடியவில்லை. ஆனால் வரலாறு சரஸவாணியை அறிவு நிறைந்த பெண்ணாகக் காணவில்லை. அற்புதத் தெய்வம் என்றே பெயரிட்டது. "பெண்கள் அறிவுள்ளவர்களாக இருக்கமுடியாது. அப்படி இருந்தால் அது தெய்வீகம் கலந்த நிலை" என்பது தான் சமுதாயத்தின் கருத்து.

பெண்களைத் தெய்வமாக்க வேண்டாம். சமுதாயம் அவர்களின் நியாயமான மன உணர்வுகளைப் புரிந்து கொண்டால் போதும். எங்கள் சமுதாயம் இப்போது இருப்பதை விட மேலும் அதிகமான அமைதியுடனும், செழுமையுடனும் அமைதல் வேண்டும். எங்களை நாங்களே ஆட்சி செய்யும் காலம் நெருங்கும் வேளையில் எங்கள் கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றிற்கு ஊறு செய்யாத வகையில் எமது பெண்களின் மீது நாம் செலுத்தும் அழுத்தங்களைக் குறைத்து அவர்களை நிம்மதியும் நிறைவுமாக வாழச் செய்தல் வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மக்கள் பக்கம்



# இன்னும் எத்தனை காலம்?

ஐரோப்பிய நாடுகளில் அண்மைக்காலமாக தோன்றியிருக்கும், அரசியல் மாற்றங்களை மிகுந்த பீதியுடனும், தவிப்புடனும் அவதானிக்க வேண்டிய நிலையை தமிழ்மக்கள் பெற்றிருக்கின்றனர்.

நீண்டகால நோக்கில், அரசியல் பின் புலங்களைப்பற்றி ஒரு தெளிவை தமக்குள் தாமே ஏற்படுத்திக்கொள்ளத் தவறியமை இந்தப் பீதிக்கும் தவிப்பிற்கும் காரணங்களாக அமைகின்றன.

எமக்கு, தற்காலிக தஞ்சம் அளித்திருக்கும் இவ் ஐரோப்பிய நாடுகளிடையே நிரந்தர இருப்பை உறுதிசெய்துவிடலாம் என்ற நினைப்பு எம்மில் அநேகருக்கு இருக்கக் கூடும்; ஆனால், இத்தகைய நினைப்பும், எதிர்பார்ப்பும் பொய்யானது என்ற உண்மையின் ஆரம்ப அறிகுறியே தற்போதைய அரசியல் நடவடிக்கைகள் எனலாம்.

பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், பிரித்தானியா போன்ற நாடுகளில் அகதிகள் அந்தஸ்துக்கோரி அவை நிராகரிக்கப்பட்டோர் தொடர்பாக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படக்கூடிய வகையிலேயே சட்டங்கள் இயற்றப்பட்டு வருகின்றன. இது அந்தந்த நாடுகளின் நலன்களைப் பொறுத்த விடயம்; அந்த நாடுகள் எதிர்நோக்குகின்ற உள்நாட்டு, வெளிநாட்டு பிரச்சனைகளுக்கான விமோசனத்திட்டம். இவற்றை, நாங்கள் குறை கூறுவதில் எதுவிதமான அர்த்தமும் இருக்கமுடியாது.

இங்கே, எங்களை நாங்களே கேட்டுக்கொள்ளவேண்டிய கேள்விகள் காத்துநிற்கின்றன.

எமது வாழ்க்கைக்கான, பாதுகாப்பிற்கான போராட்டம், எமது மக்களாலும், எமது போராளிகளாலும், அளப்பரிய தியாகங்களூடு முன்னெடுத்துச் செல்லப்படுகையில், அந்தப் போராட்டத் தளத்திலிருந்து சுயநல நோக்கில், இடம்பெயர்ந்துகொண்ட நாம், அந்தப் போராட்டத்தை வலுப்படுத்தும் வகை அறிந்தோமா? அதற்காக உழைத்தோமா?

சிங்கள ஏகாதிபத்தியத்தின் கொடுமைகளை, எமது தேசம் அனுபவித்துவரும் துன்பங்களை நாங்கள் வாழ்கின்ற தேசங்களுக்கு எப்படிப் புலப்படுத்தினோம்? அதற்காக அக்கறை எடுத்துக்கொண்டோமா?

சொந்த சுகவாழ்வு என்ற அடிப்படையிலே சிந்திப்பதை விடுத்து, பொதுப்பிரச்சனையை எங்கள் பிரச்சனையாக அணுகினோமா?

அலட்சியமும், தப்பினோம் என்ற கீழ்த்தரமான மனோபாவமும் எங்களில் பலபேருக்கு உண்டு; பொதுப்படையான கூட்டு உணர்வுகள் அரிதாகவே காணப்படுகின்றன.

எங்கள், பிறந்த மண்ணில் இல்லாத பாதுகாப்பு எமக்கு எங்கும் நிச்சயமாக ஏற்பட்டுவிடப் போவதில்லை. சொந்த மண்ணில், அதற்காகப் போராடாமல், எமது வாழ்வைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்ற நினைப்பில் இடம்பெயர்ந்த நாம், ஒவ்வொரு நாட்டின் சட்டங்களாலும் பந்தாடப்படுகின்றோம். இது தவிர்க்க முடியாத விதி; இதற்காக வருந்திக் கொள்வதில் அர்த்தமில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





அண்மையில் மூன்று ஈழத்தமிழ்ப் பெண்கள், கதறக்கதற பிரான்சியப் பொலிசாரால் தூக்கிச்செல்லப்பட்டு நாடு கடத்தும் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டனர். விமான இருக்கைகளுடன் பிணைக்கப்பட்ட நிலையிலும், அவர்கள் மேற்கொண்ட ஒத்துழையாமை நடவடிக்கைகளால், அவர்கள் விமானத்தில் இருந்து வெளியே இழுத்துவரப்பட்டு, தடுப்புக்காவலிலும் வைக்கப்பட்டனர். சில நாட்களின் பின்னர் அவர்கள் கொழும்பிற்குத் திருப்பி அனுப்பட்டனர். இது போன்று விமான நிலையத்தில் வைத்து முப்பத்தியாறு தமிழர்கள் திருப்பியனுப்பட்ட சம்பவமும் அண்மையில் பிரான்சில் நடைபெற்றது. வேறு சில நாடுகளிலும் தமிழர்கள் நாடுகடத்தப்பட்டுள்ளனர். இவை தொடர்வதற்கான சாத்தியக்கூறுகள் அதிகரித்திருக்கின்றன.



புகைப்படங்கள் : PARIS MATCH



இந்த நிலை ஏன்? புழுக்களைப் போல நாங்கள் கேவலமாக நோக்கப்படுகின்றோம்; விரும்பத்தகாத, அருவெருப்பிற்குரிய சுமைகளாகவே நாங்கள் கருதப்படுகின்றோம்.

ஏன்? எமக்கென்றொரு தேசம் இல்லை! எமக்கென்றொரு அரசு இல்லை! சுதந்திரம் பெற்ற ஒரு தேசத்தின் குடிமக்களாக நாம் தலைநிமிர்ந்து நடக்கமுடியவில்லை. அதுதான் காரணம். எமது பிரதேசத்தில் அன்னியனை விரட்டியடித்து, எமது இருப்பை உறுதிப்படுத்திக் கொள்ளாமல், நாதியற்று அகதிகளாய் அலைகின்றோமே அதுதான் காரணம்.

வெளிநாடுகளில், பாதுகாப்பற்ற தன்மை தோன்றியுள்ளதை எம்மக்கள் உணர்ந்துகொண்டுள்ளனர்; காரணமின்றித் தாக்கப்படுவது, திருட்டு, வழிப்பறி, கொள்ளை, கொலை என்பவை, கேட்பாரற்று நடத்தப்படுகின்றன. இதனை, இங்கேயே வாழ்ந்து கழிப்போம் என்று உணர்வுகளற்று வாழ்பவர்கள் சகித்துத்தான் ஆகவேண்டும். இனரீதியான, நிறரீதியான, பாகுபாடுகள், அடக்குமுறைகள் மேலோங்கக்கூடிய சாத்தியக்கூறுகளையும் எதிர்நோக்க வேண்டியே இருக்கும். இத்தகைய அக்கிரமங்களை சகித்துக் கொள்ள முடியாத மக்கள் தங்கள் சொந்த பூமியை மீட்பதற்கான போராட்டத்தில் ஏதோ ஒருவகையில் உணர்வுபூர்வமாகப் பங்கெடுத்து, அகதி வாழ்விற்கு, எவரிடமோ கையேந்தி நிற்கும் இழிநிலைக்கு முழுக்குப் போடவேண்டும்.

இந்த இரண்டு வழிகளில் எதனைத் தெரிவுசெய்தால், தமக்கும், தம் எதிர்கால சந்ததிக்கும் சௌகரியம் என்பதை ஒவ்வொருவரும் தீர்மானித்துக்கொள்ளவேண்டும்.

ஐரோப்பிய நாடுகள், எதிர்காலத்தில் ஒன்றாக இணைந்து செயற்படுவதற்கான இணக்கப்பாடுகள் காணப்பட்டுவிட்டன. சில விடயங்களில் மாத்திரம் உடன்பாடுகள் ஏற்படவில்லை என்ற போதிலும், அவையும், தொடரும் பேச்சுவார்த்தைகளின் மூலம் நீக்கப்பட்டு, அவை தமக்கிடையே இணைப்பை ஏற்படுத்துவது உறுதியாகிவிட்டது. இந்த நிலையில், இந் நாடுகளின் அகதிகள், குடியேறிகள் தொடர்பான பிரச்சனைக்குரிய தீர்வுகளும் பொதுவடிவம் பெறும். அப்பொழுது, இந்நாடுகளில் தங்கியிருக்கும் அகதிகள், பல பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டிவரும். வேலை வாய்ப்புகளும் சவாலாக இருக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





பிரான்ஸைப் பொறுத்தவரை, புதிய பெண்பிரதமர் திருமதி. எடித் கிறேஸோன் அண்மையில் வெளியிட்ட கருத்துகள், அகதிகளுக்கும், குடியேறிகளுக்கும் அச்சம் தருவனவாயும், கசப்பை ஏற்படுத்துவனவாயும் உள்ளன. சட்டவிரோதக் குடியேறிகள் தொடர்பாகவும், அகதி அந்தஸ்து விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்கள் தொடர்பாகவும், அரசாங்கம் கடுமையாக நடந்துகொள்ளுமென்றும், விஷேடமாக ஒழுங்கு செய்யப்பட்ட விமானங்களின் மூலம் அவர்கள் நாடுகடத்தப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்த வேகத்திலேயே, அதன் தாக்கத்தை உணரக்கூடியதாக இருந்தது.

வதிவிடப்பத்திரம் அற்ற பிற நாட்டவர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டார்கள்; பலர் கைதுசெய்யப்பட்டார்கள்; தொழில் புரியும் பிற நாட்டவர்களுக்கு அளிக்கப்படும் வசதிகள் குறைக்கப்பட்டுள்ளன.

இதுபோன்று, ஜேர்மனியில் தமிழர்கள் உட்பட, அகதி அந்தஸ்து விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட அனைத்துப் பிறநாட்டவர்களும் வெளியேற்றப்படுவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. சுவிஸ் நாட்டிலும் அகதிகள், குடியேறிகள் தொடர்பாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டுவருகின்றன.

ஐரோப்பிய நாடுகளில் குடியேறிகளுக்கு எதிரான போக்கு அச்சம் தரும் வகையில் வளர்ந்துவருகின்றது. வெளிநாட்டவர்களுக்கு எதிரான கொள்கைகளை, தமது கொள்கைகளாக வரிந்துகொண்ட கட்சிகள் மக்களின் ஆதரவைப் பெற்று வளர்ந்துவருகின்றன. இது பெரும் எச்சரிக்கையாகவே எழுந்து நிற்கின்றது. இந்த பாரிய ஆபத்துக்களிடையே எமது வாழ்வையும், எமது குழந்தைகளின் வாழ்வையும் சிறைவைக்க நினைப்போமானால், நாம் உணர்வுகளற்ற சடலங்களாகவே கருதப்படுவோம். எமக்கென்றொரு தேசம் உண்டு. அந்த தாய்ப்பூமியின் அரவணைப்பில் நாமும், எமது எதிர்காலங்களும் வாழவேண்டும். அந்த அற்புதமான வாழ்வுக்காக நாம் ஒன்றிணைந்து உழைக்கவேண்டும் என்று உறுதியெடுத்துக் கொள்வோம். புழுக்களைப்போல் வாழ நாம் தயாராய் இல்லை என்பதை நிரூபித்துக் காட்டுவோம்.

---

**ஜேர்மனி:-** அகதி அந்தஸ்துக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டோர் அனைவரையும் யூன் மாத முடிவுக்குள் அனுப்பப்போவதாக அறிவித்தது. அகதி அந்தஸ்துக் கோரிக்கையை நிராகரித்து விட்டு, வதிவிட விசா பெற்ற, பல்லாயிரக்கணக்கானோரின், நிலைமையும் பாதுகாப்பானதில்லை எனவும், அரச அறிக்கைகள் தெரிவித்தன. பலத்த கண்டனங்களைத் தொடர்ந்தும், இலங்கையில் போர் நடைபெறுகின்ற காரணத்தினாலும் உலகத் தமிழர் இயக்கம் போன்றவை, கொக்கட்டிச்சோலைப் படுகொலையை சுட்டிக்காட்டியும், அகதிகளின் நலன்களை வலியுறுத்தியும் நடத்திய பிரமாண்டமான ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்களின் காரணமாகவும், இவ்வச்சுறுத்தல் பின்போடப்பட்டுள்ளது. ஆயினும், போலியான சமாதானம் ஒன்று, அங்கு தற்காலிகமாக ஏற்பட்டால் போதும், உடனே அனைவரும் அனுப்பப்படுவார்கள். அகதிக்கோரிக்கையை நிராகரித்தோர் 3000 பேர், இலங்கைக்குப் போய்வந்ததையும், இது அகதிகளாக தம்கோரிக்கையைச் சமர்ப்பித்தவர்களில் 10% ஆனோர்என்றும் அரசு காரணம் காட்டுகின்றது. அகதி அந்தஸ்து வழங்கிய, 1000 பேருக்குக் குறைந்தோரைத் தவிர்ந்த ஏனையோரை, (அரச புள்ளிவிபரம் 29000 பேர்). தொழிலுக்காக வந்த தற்காலிக குடியேறிகளாக ஆக்கி வைத்துள்ளது ஜேர்மன் அரசாங்கம். இவர்கள், 8 வருடங்கள் வாழ்ந்த போதிலும், குடியுரிமை அந்தஸ்துக் கோரும் இவர்களது உரிமையையும் சட்டமூலம் நீக்கி, எந்த நேரமும், விரும்பியவாறு அனுப்பக்கூடிய நிலையில் வைத்துள்ளது.

**பிரித்தானியா:-** அகதிகளை கொண்டுவரும், விமான சேவைகளுக்கான தண்டனையை 1000 பவுணிலிருந்து, இருமடங்காக உயர்த்தி உள்ளது. அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டோர், நீதிமன்றங்கள் மூலம், தமக்கு வழங்கப்பட்டுள்ள தீர்ப்பினை எதிர்த்து விண்ணப்பம் செய்யும் உரிமையும் மறுக்கப்பட்டுள்ளது. அகதிகள் தொடர்பாக அரச நிறுவனம் ஒன்று வழங்கும் தீர்ப்பே இறுதியானதாக இருக்கும்.

**பிரான்ஸ்:-** பிரதமர் எடித் கிறேஸோன் கூறியதற்கு மாறாக, குடியேறிகள் பலவந்தமாக திருப்பி அனுப்பப்படமாட்டார்கள் என ஜனாதிபதி மித்தரோன் தெரிவித்திருந்தும், நடைமுறை மாறாக இருக்கின்றது.


குடியேறிகளுக்கு எதிரான வலது சாரிக் கட்சிகள் வளர்ச்சிபெற்றுவருகின்றன. பிரான்சில், F. N. (FRONT NATIONAL) கட்சி உட்பட வலது சாரிக் கட்சிகளின் ஆதரவுவீதம் 51 க்கு மேலாக உள்ளது. தற்போது பதவியில் இருக்கும் சோஷலிசக் கட்சிக்கு 24% ஆதரவு கூட இல்லை. இதனால், சோஷலிசக் கட்சிகள், சோஷல் டெமோக்கிறட்டிக் கட்சிகள்கூட, குடியேறிகளுக்கு எதிரான கொள்கைகளை, பதவி வாக்குகளுக்காக முன்வைக்கின்றன. பிரான்சில், புதிய பிரதமரின் செய்கைகள் இதனைக் காட்டுகின்றன.

**டென்மார்க்:-** டென்மார்க்கிலும், கொன்சவேட்டிக் கட்சி, தனது சரிந்துபோகும் செல்வாக்கை உயர்த்த, அகதிகள் பிரச்சனையை -விஷேசமாக இலங்கை அகதிகளின் பிரச்சனையை-முன்வைத்துள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






அகதிகள் வெளியேற்றப்படுவதை விபரிக்கும் ஒரு கேலிச்சித்திரம். இக்கேலிச்சித்திரம் JUNE 9 1991, GUARDIAN வார இதழில் வெளியிடப்பட்டது.

18, யூலை 1951 ம் திகதி ஐ. நா. சபையின், அகதிகள் சட்டம் (GENEVA CONVENTION) உருவாகி 40 ஆண்டுகாலம் பூர்த்தியாகி, அச்சட்டம் 107 நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட போதிலும், மேற்குலகம் அகதிகளை வரவேற்க வேண்டிய அவசியம் இல்லாது போனதற்கு உரிய காரணங்களாக இவற்றைச் சொல்லலாம்.

1) COLD WAR முடிந்து போனது. கிழக்கு ஐரோப்பாவிலிருந்து, அகதிகள், மேற்குலகிற்கு வருவதை, தப்பிவரும் போது சுடப்படுவதைப் பெரிதாகக் காட்டி, கொம்யூனிச கிழக்கு முகாமை வீழ்த்துவதற்கு அகதிகள் பிரச்சினை பூதாகரமாக்கப் பட்டதில், 3ம் உலக அகதிகள் பயன் அடைந்தனர். தற்போது அதற்கான அவசியமில்லை.

2) கிழக்கு ஐரோப்பாவில் - வெள்ளைநிற தொழிலாளர்கள், கைத்தொழில்த் துறையில் வேலை செய்யப் போதுமான அளவு இருப்பது. அத் தொழிலாளர்களால் மேற்கைரோப்பாவின் தேவை நிரப்பப்பட முடியும்.

3) கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவ நிதி தேவைப்படுவது. சமூக உதவிப் பணமாக 3ம் உலக அகதிகளுக்கு செலவாகும் பணம் விரையம் ஆவதாகக் கருதப்படுவது.

4) ஐரோப்பா ஒன்றாக இணையும்போது, பின்தங்கிய ஐரோப்பிய நாடுகளை, விருத்திசெய்ய, நிதி மூலதனம் தேவைப்படுவது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# சிங்கள ஆதிக்கரின் சிந்தனைக்கு

அடி தொழாத் தாய் எங்கள் ஈழம் - அவள்
அழகினைப் பறை சாற்றிக் கொட்டடா மேளம்
கொடி எங்கள் புலிக்கொடி தந்தை - அது
கொத்தளம் ஏறினால் அதில் என்ன விந்தை

ஆண்டாண்டு காலமாய் ஆண்டோம் - இனி
அன்னியன் ஆட்சியை வேண்டவே வேண்டோம்
பூப்போன்றதே எங்கள் வாழ்வு - அந்த
புனிதத்தை மீட்டிட நிதநிதம் சாவு

இரவாகி இருள் சூழ்ந்து கூட்டும் - காலை
எழுகின்ற சூரியன் பகல் எனக்காட்டும்
பிரபாவின் நிழல் எங்கள் நிலவு - அவன் கை
பீரங்கி உமிழ் ஒளி பகலுக்கு உறவு

துப்பாக்கி வேட்டெமது பாட்டு - மடியில்
தூங்கிடும் குழந்தைக்கும் அதுவே தாலாட்டு
ஒப்பாரி வைத்துமே ஆமி - சிதறி
ஓடிடப் பார்த்துமே சிரிக்குதெம் பூமி

வெஞ்சமர் வீரரோ நீங்கள் - உங்கள்
வீரமும் தீரமும் அறிவோமே நாங்கள்
அஞ்சாத புலிகளைக் கண்டால் - உம்மில்
அலறியே கதறிடா ஆள்யாரும் உண்டா

யாரென்று நினைதிங்கு வந்தாய் - புலி
யானையைக் கண்டோடும் என்றா நினைத்தாய்
போர் செய்ய வந்திட்ட பேயே - அஞ்சி
புறமுதுகு காட்டுமுனை பெற்றவளோர் தாயா ?


குருவூரான்
இத்தாலி

www.tamilarangam.net



# வருத்தம்

சிறுகதை



இரத்த வெடில் சுமந்த காற்று வாட்டின் வெளிநடைப் பாதையிலும் மிதந்து கொண்டிருந்தது. துயரில் தளையுண்டிருந்த நோயாளர் சிலர் எழுந்து பைத்தியம் பிடித்தவர்களைப் போல அங்கும் இங்குமாக திரிந்து கொண்டிருந்தார்கள். நடு நிசி. ஆஸ்பத்திரிக்கு வெளியே நாய்கள் மிகுதியாகக் குரைத்தன. மிக மெதுவாக மினிபஸ் ஒன்று ஆஸ்பத்திரி வீதியால் ஊர்ந்து "சிற்றி பேக்கறி" அடியில் தரித்து நின்றது.

ஜீவனும் ஜீவனுக்கருகில் நின்ற வாச்சரும் அந்தச் சத்தத்தை செவிமடுத்தார்கள்.

வாச்சர் ஜீவனைப் பார்த்து "ஆஸ்பத்திரியில காயப்பட்ட பொடியள் சிலர் கிடக்கிறாங்களாமடா, தம்பி! அவையளுக்கு பாதுகாப்புக்காக அடிக்கடி பெடியள் இப்படி வந்து போறவங்களாம். அவங்களாத்தான் இருக்கும்; பயப்படத் தேவையில்லை".

கோட்டை இராணுவம் வெளியில் வர முயற்சி எடுப்பதையும், ஆஸ்பத்திரியை நோக்கி ஷெல் அடிப்பதையும் அறிந்திருந்த ஜீவன், வாச்சர் அப்படிச் சொன்ன போது எச்சரிக்கையாக எழுந்து சென்று அவதானித்து விட்டு, ஆஸ்பத்திரியின் வெளி விறாந்தையின் தூணில் சாய்ந்த வாறு அமர்ந்தான்.

"வாச்சருக்கு என்னை யாரென்று தெரிந்திருக்குமோ? தெரிஞ்சா என்ன? என்னத்துக்கு பிறகு வீணா தம்பட்டம் அடிப்பினம், எதுக்கும் அவதானமா இருக்கோணும்" என தன்னுள் தீர்மானித்துக் கொண்டான்.

கடுமையாக நோயுற்ற நோயாளர் சிலர் வலியைக் கொடிதாக அனுபவிக்கும் அழுகையும் முனகலுமான ஒலி காற்றில் கலந்து பின் இராக் கால பொழுதில் தனிமையில் இருந்த அவனுக்கு ஒரு சோகமான பாடலின் சுரத்தை வாசித்தது.

சுரேஸ் கட்டிலில் கிடந்தவாறே விழிகளை நடை பாதையினூடே நிறுத்தி "யாராவது வருவார்களா?" என தாயைத் தே டும் சேய் போலப் பார்த்தான். போர்வை காலுக்கு கீழே திரண்டுகிடந்தது. எலும்பும் தோலுமாய் காய்வான உடல், முகம் சுருங்கி, கண்கள் வெளிறிப் பிதுங்கி நிற்க அழுகையை அடக்கிக் கொண்டு ஜீவனைப்பார்த்து, "கை சரியா வலிக்குதண்ணா ஐயோ .......... என்னுல தாங்கேலாமலிருக்கு........"
ஒண்டுக்கு வருகுதண்ணே....
"வாம்மான்"
சுரேஸின் கையை தனது தோளில் போட்டபடி அவனைத்தாங்கி கட்டிலில் இருந்து இறங்க உதவினான். ஒவ்வொரு கட்டில்களாகப் பிடித்து, பதனமாகக் காலை எடுத்து வைத்து மலசல கூடத்தை நெருங்கினான் சுரேஸ். அவனது வலது கையில் ஐந்து விரல்களைச் சுற்றியும் துணிகளால் கட்டப்பட்டிருந்தது. சீழும் இரத்தமும் துணிக்கட்டுக்களால் வெளியேறியிருந்தது. அவற்றின் ஊடாக துர்மணம் எழுந்து கொண்டிருந்தது. அது அவனது மூக்கைத் துளைத்தது.

எனக்குப் பயமாயிருக்கு.... இப்படி மணக்குதண்ணே........

அவனை அணைத்துக் கூட்டி மெல்ல கட்டிலை நோக்கி நடந்து வந்தபடி......
"யோசிக்காதையம்மான், அது மாறி விடும்".

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவனைக் கட்டிலில் கிடத்தி, போர்வையால் போர்த்தி அவனது தலைமாட்டில் இருந்து கொண்டே ஆறுதல் வார்த்தைகள் கூறி அவனைத் தூங்கவைத்தான்.

சுரேஸிற்கு அவனுடைய தங்கச்சியின்ர நினைப்பு, அம்மா, அப்பாட நினைப்பு, தோழர்கள் பற்றிய நினைப்புக்கள் ஒருவித ஏக்கத்தோடு எழுந்து குதித்தன. அருகில் எப்போது யாராவது இருக்கவேண்டும் என்பதுபோல தேம்பி ஆற்றாமையால், அழுதது அவனது உள்ளம்.

அதிகாலை வழக்கம்போலவே விடிந்தது...... ஆஸ்பத்திரியில் நோயாளிகள் சிலர் இருமிக்கொண்டும், அனுங்கிக் கொண்டும், எதையோ பறிகொடுத்தவர்களைப் போல, அல்லது எதையோ தொலைத்தவர்களைப் போல இருந்தார்கள். தாதிமார்கள் ஒவ்வொரு வார்ட்டிலும் நோயாளிகளை சிரத்தையோடு அணுகிய வண்ணமாய் இருந்தார்கள். ஜீவன் சுரேசினை எழுப்பி சுடுநீரால் அவன் உடம்பெல்லாம் கழுவித் துடைத்து ஆக வேண்டியன யாவும் தாயினும் மேலாய் நின்று செய்து முடித்து விட்டு, அவனது மருத்துவரைச் சந்தித்து பேசிவிட்டு விடுதலைப் புலிகளின் இராணுவத் தலைமையகத்திற்குச் சென்றான்.

ஜீவனை இறுக கட்டி அணைத்தபடி கூட்டிச் சென்றார் அண்ணர்.
"இரம்மான், எப்படியம்மான் ஆஸ்பத்திரி நிலைமையள்?"
"காயம்பட்டவர்கள் தங்கிற வார்ட் படுமோசமண்ணை! சில மெத்தையள் ஊனங்கள் ஓடி ஊறிப்போயிருக்கு; நைய்ந்து போயும் கிடக்கு.... வடிகால்கள் அசுத்த துர்மணமாயிருக்கு, நோயாளியள் சிலரை கட்டில்கள் இல்லாததால தரையில கூட விட்டிருக்கண்ணே!"

அண்ணரின் முகத்தில் வேதனைக் குறிகள் எழுந்து உறைய மௌனமாயிருந்தார்.
"சுரேஸிட வலது கை காயம் இன்னும் காய்வதாயில்லை. சீழ்வடிந்து கொண்டேயிருக்கு, மணம் வேற; அவன் ஒரே அழுகைதானண்ணே!"
"கவனமாய் பார் மச்சான்! நான் பின்நேரம் வாறன்"
மறுநாள் சுண்ணாக ஏரியாப் பொறுப்பாளரின் உதவியுடன் ஜீவன் சுரேஸின் வீட்டிற்குள் சென்றான்.
பனை ஓலைகளால் அடைக்கப்பட்ட வேலி, செம்மண் தரையில் நீள கறுத்த கோடாக ஒற்றைப் பனை நின்றது.
"வீட்டுக்காரர்..."
"யாருதம்பி?" நிறம் வெளிறிய கந்தல் விழுந்த நூல் சேலையை இடுப்பில் முடிந்து கொண்டு சுரேஸின் தாய்.
"சுரேஸிட தம்பியவங்களா? வாங்கய்யா!" அன்போடு வரவேற்று நின்றாள்.
"சுரேஸனைப் பார்க்கோணும் எண்டு ஆசையாயிருக்கு! எப்பிடி சுகமாயிருக்கிறானா?" என தாயார் விசாரித்தாள். சுரேஸின் சின்னத் தங்கை வாணி ஓடிவந்து அவனது காலைக் கட்டிக் கொண்டாள்.
சுரேஸ் சுகயீனமாயிருப்பது பற்றியும் அவனது கையில் காயம் பட்டு இருப்பது பற்றியும் அவன் கூறினான்.
"அம்மா கவலைப்படுற அளவுக்கு பெரிதா ஒன்றுமில்லை..... நான் போயிற்று பிறகு ஒரு முறை வாறனம்மா" ஜீவன் குச்சு ஒழுங்கைகளால் ஓடி மறைந்தான்.

சுரேஸின் தாய் கண்களை முந்தானையால் துடைத்துக் கொண்டாள். சுரேஸ் நட்டு வளர்த்த தென்னை மரங்களுக்கூடாக, மெல்ல, சோகமாய், நடந்து பின்வளவில் நிற்கும் தனது கணவனை நோக்கி சென்றாள்.

சுரேஸ் படுத்திருந்த கட்டில் அநாதரவாய் கிடந்தது. ஜீவன் ஏக்கத்தோடு சத்திரசிகிச்சைப் பிரிவை நோக்கி ஓடினான்.
"ஐயோ! ஐயோ!" என்ற சத்தம் ஈனசுரத்தில் கேட்டுக் கொண்டிருந்தது. தனது தோழனின் துயரமான அழுகைச் சத்தம் தான் என் உணர்ந்த ஜீவனது உள்ளம் துடித்தது.

சத்திர சிகிச்சை செய்யும் நிலையத்திலிருந்து கிறீச்.... கிறீச் என ஸ்ரெச்சரை சத்தமாக தள்ளிக் கொண்டு வந்து கொண்டிருந்தார்கள். அங்கு சுரேஸ் இல்லை!
வெளியில் நெடுநேரமாக காத்துக் கொண்டு நின்றான். அவனது வீட்டாரைக் கண்டது பற்றி அவனுக்குச் சொல்ல வேண்டும். இது அவனுக்கு ஆறுதலாக இருக்கும். அவன் தாக்குதலின் போது காயம் பட்டதும் அவனைச் சுமந்து முகாமுக்கு கொண்டு சென்றதுமான நினைவுகள் ஆறாத காயமாகவே ஜீவனுக்குள் துடித்தன.

அம்புலன்ஸ் வண்டிகள் வேகமாக போவதும் வருவதுமாக இருந்தன. சில வாட்டுகளை நோக்கி டாக்டர்கள் விரைவாக நடந்து கொண்டிருந்தார்கள். மாலைச் சூரியக் கதிர்கள் ஆஸ்பத்திரியின் சன்னல்களில் மங்கிய ஒளியாய் பட்டுத் தெறித்தன. எங்கும் ஈராடியாயிருந்தது. மரங்கள் மோனித்துநின்றன. நோயாளர்கள் சிலர் ஆஸ்பத்திரி வெளிக்கட்டில் தலையில் கை வைத்தபடியும், நாடியில் கை கொடுத்தபடியும் இருந்து கொண்டிருந்தார்கள். அவர்களைக்கடந்து சென்று சுரேஸினை அவனது கட்டிலில் கிடத்தினார்கள்.

ஜீவன் சுரேஸிற்கு அருகிலேயே நின்றுகொண்டிருந்தான். தாக்குதல்களின் போது தனித்தன்மை வாய்ந்த போர்த்திறமை, துப்பாக்கியால் இலக்குத் தவறாது சுடும் பயிற்சி, கடினமான பாதையிலும் தடம்புரளாத மனஉறுதி, சக போராளிகளின் மீது அவன் காட்டும் நேயம், அவனது மண்ணைப் பற்றிய இடையறாத நேசனை என்றெல்லாம் ஜீவனின் எண்ணம் ஓடியது.

கட்டிலில் கிடந்து புரண்டபடி சுரேஸ் பல மணி நேரங்கள் கடந்தே பேசினான்.

"இனி.... நான்...... என்னதான் செய்வன்"
"அப்பிடி யோசிக்காதே சுரேஸ்....." அவனது எண்ணங்களை வேற்று திசையில் திருப்புவதற்காக முயன்றான்.
"சுரேஸ்... வீட்டில உன்ற அம்மா, அப்பா, உன்தங்கச்சி எல்லோரும் சுகமாயிருக்கினம். அம்மா உன்னைப் பார்க்க ஆசையாயிருக்கெண்டு சொன்னவாடா. நீயும்

கைமாறின பிறகு போயிட்டு வர லாம் தானே!"
"அம்மா அழுதவாவே?"
"இல்லையடா."
ஜீவன் சுரேஸுடன் கதைத்துக் கொண்டிருந்த போது பீறிட்டுவரும் அழுகையை அடக்கிக் கொள்ள முயன்றான். சுரேஸ் தனது கைளை இடது கையால் தாங்கி வைத்திருந் தபடி நெடுநேரமாக யோசித்தான். பயிற்சி முகாமில் தனது தோழர்க ளுடன் சந்தோசமாக பாடிய பாடல் கள் தூரத்தே ஒலிப்பது போன்ற பிரமையில் மூழ்கினான்.
கிளைகள் தறித்து மொட்டையாக நிற்கும் மரம் போலவே அவன் தனது கையைப் பற்றி உணர்ந்தான்.
"ஜீவனண்ணே..!"
"என்னம்மான்!"
"எனது கை...." மிகத் தணிந்த சுரத் தில், "என்ர சுடு விரலைக்கூட இழந்து விட்டேன்" என்றான்.

ஒரு கையை இழந்த கவலையை விட, இனிமேல் நல்லாகச் சண் டையிட முடியாதே என்ற கவலை அவனை உலுக்குவதை உணர்ந்த ஜீவனது கண்கள் அழுது கொண்டே இருந்தன.

கட்டிடங்களில் துவாரங்கள் ஊடாக நுழைந்து முனகலும் அனுக்கமும் ஏக்கமும் சுமந்த காற்று ஊனமாய் அழுது கொண்டிருந்தது.



நன்றி: EUROPE ET DROIT D'ASILE

# பூக்களாகு நாங்கள்

ஓடையில நீரோட கட்டுப்பாடு - அந்த
ஓடையில நீருக்குந்தான் தட்டுப்பாடு
பாடையில ஏற்றிடத்தான் திட்டம்பாரு - தம்பி
பாடம்நன்கு புகட்டுகின்றான் ஓடுகின்றாரு..........

அண்ணன்தம்பி யாருமில்ல ஆறுகடல் சொந்தமில்ல
வேறுவழி தோணவில்ல போராடுவோம் வாடிபுள்ள
முத்துப்புள்ள.......... ஓ .......... முத்துப்புள்ள

யாருக்குயார் சொந்தம்புள்ள வேருக்குநீர் சொந்தமில்ல
ஊருக்குள்ள ஆமிபுள்ள உளக்கவேணும் வாடிபுள்ள
வள்ளிப்புள்ள.......... ஓ .......... வள்ளிப்புள்ள

ஏருழுதும் சோறுஇல்ல கார்முகிலும் ஓடவில்ல
போறஉசிர் போறதுதான் போராடுவோம் வாடிபுள்ள
முத்துப்புள்ள.......... ஓ .......... முத்துப்புள்ள

பூக்களுக்கும் காவலில்ல பூசைசெய்ய தெய்வமில்ல
தூக்கமில்ல ராத்திரில தூங்கிவிட்டா நாடுமில்ல
வாடிபுள்ள.......... ஓ .......... வாடிபுள்ள

நேற்றிருந்தோர் இன்றுஇல்ல காற்றுப்போனா ஒண்ணுமில்ல
தோற்றபுலி ஏதுமில்ல துவக்கெடுப்போம் வாடிபுள்ள
வள்ளிப்புள்ள.......... ஓ .......... வள்ளிப்புள்ள

பூவலுக்க தண்ணியில்ல பூவரசும் பூக்கவில்ல
ஆணுமில்ல பொண்ணுமில்ல அனைவருமே களத்தில்புள்ள
முத்துப்புள்ள.......... ஓ .......... முத்துப்புள்ள

- கவிஞர் முகில்வாணன் -

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





சிறீலங்கா விமானப்படையின் குண்டுத்தாக்குதலை அலட்சியம் செய்துவிட்டு, குமுறும் எரிமலை யாய் தமிழீழ மக்கள் திரண்டுள்ளனர். புனிதமான, தொழிலாளர்களது மே தினக்கொண்டாட்டங் கள். எமது மண்ணில், எமது மக்களால் கொண்டாடப்பட்டன. சிங்கள இனவாத அரசிற்கு சவால் விடும் இம் மக்கள் பூகம்பத் தோற்றுவாய்




திரு. வே. பாலகுமார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net








திரு. மாத்தையா

தமிழீழ விடுதலைப் புலிகளினால் ஒழுங்குசெய்யப்பட்ட மே தினக் கூட்டத்தில் இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டுள்ளனர். நல்லூர் ஆலயத்தின் வீதியில் நடத்தப்பட்ட இக்கூட்டத்தில் இவ்வளவு தொகையான மக்கள் கலந்துள்ளது, விமானப்படையின ரால் வானத்தில் இருந்து கணிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் பல கட்சிகளாலும் ஒழுங்கு செய்யப்பட்ட மே தினக் கூட்டங்களில் ஒரு இலட்சத்திற்கும் குறைவான மக்களே கலந்து கொண்டனர்.

- BBC தகவல் -



www.tamilarangam.net



# பத்திரிகா தர்மம்?

"கருத்துக்கள்" மக்களின் சிந்தனைகளையும், செயற்பாடுகளையும் நிர்ணயிக்கும் அபார சக்தி படைத்தவை. இந்தக் கருத்துக்களை உற்பத்தி செய்யும் சாதனங்களில், பத்திரிகைகள் உற்பத்திசெய்யும் கருத்துக்கள், சமுதாயத்தின் கருத்தாதிக்கத்தை, உலகப்பார்வையை நிர்ணயிக்கும் பலமிக்க சாதனங்களாக செயற்படுகின்றன.

முதலாளித்துவ சமுதாயத்தில், ஆளும் வர்க்கத்தின் நலன்களையும், அபிலாசைகளையும், பத்திரிகை உலகம் பிரதிபலிக்கத் தவறுவதில்லை. ஏனென்றால், ஆளும்வர்க்கத்தின் கருத்து உற்பத்திச் சாதனங்களாகவே பத்திரிகைகள் செயற்படுவதுண்டு. அத்துடன் இந்தக் கருத்து உற்பத்திச் சாதனங்களின் உரிமையாளர்களாக இருப்பவர்கள் முதலாளிவர்க்கத்தைச் சார்ந்தவர்களே. முதலாளித்துவ ஆளும் வர்க்கம், பத்திரிகைச் சாதனங்கள் மூலம் மக்களின் மனதை அடிமைப் படுத்தி வைக்கின்றது. இதை நீடிக்கச் செய்வதற்காக பழமை வாதத்தையும், மூடநம்பிக்கையையும் வளர்க்கின்றது. புரட்சிகரப் பார்வையை மழுங்கடிக்கின்றது. மக்களுக்கு அரசியல் விழிப்புணர்வை ஏற்படாமல் தடுக்கின்றது. உண்மையை மறைக்கின்றது. யதார்த்த உலகின் முரண்பாடுகளை வெளிக்காட்டி, உண்மையை உரைக்க மறுக்கின்றது.

இந்த வகையில், முதலாளித்துவ உலகம் சமுதாயப் புரட்சிக்கும், அரசியல் விடுதலைக்கும், விரோதமாகச் செயற்படுகின்றது.

தமிழீழத்தில் ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. சமூக மாற்றத்தை நோக்கிய ஒரு புரட்சி நடந்தேறிக் கொண்டிருக்கின்றது. இந்தப் புரட்சிகரமான சூழலில் வெளியாகும் பத்திரிகைகளின் பங்கும், சமூகப் பொறுப்பும், தேசியக் கடைமைப்பாடும் எப்படி அமைய வேண்டும்.

தமிழீழ விடுதலைப் போராட்டமானது, ஆக்கிரமிப்பாளர்களான சிங்களப் படைகளை, எமது மண்ணில் இருந்து விரட்டியடிக்கும் அதே வேளையில், ஒரு சமூக மாற்றத்தையும் வேண்டிநிற்கின்றது.

அந்தச் சமூக மாற்றத்திற்கு ஏற்ற விதத்தில், மக்களைத் தயார்ப்படுத்துவதற்காக, அவர்களுக்குத் தகுந்த கருத்துக்களைக் கொடுத்து உண்மை நிலைமைகளை விளக்கி, அறியாமைகளைப் போக்கி, விழிப்புணர்வு மிக்க மக்கள் கூட்டமாக மாற்ற வேண்டியதில், தமிழீழப் பத்திரிகைகளுக்கு முக்கிய பங்குண்டு.

மக்களின் சிந்தனைகளில், மனோநிலைகளில், மாற்றங்களைக் கொண்டுவருவதற்காக என்னதான் மிகப்பெரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், அதை மக்களின் மனங்களில் ஊடுருவச்செய்ய பத்திரிகைகளால்தான் முடியும்.

உண்மையில் இன்றைய சூழலில் தாமாகவே முன்வந்து விடுதலைக்கு உரமூட்டக்கூடிய, சமூக விழிப்புணர்ச்சிக்கு உதவக்கூடிய, கருத்துப் போராட்டங்களில் முனைப்புடன் இறங்க வேண்டிய தமிழீழப் பத்திரிகைகள், அவ்விதம் செய்யாது பழைய சிந்தனைகளையே ஊட்டுவதிலும், அடிமை மனோபாவத்தை வளர்ப்பதிலும் ஈடுபட முனைகின்றன. இந்தநிலையை மாற்றி அமைக்கும் நோக்குடன், ஒரு கருத்துப் போராட்டத்தை நிகழ்த்துவதற்காக புதிய சிந்தனைகளையும், சரியான பார்வைகளையும், ஆரோக்கியமான கருத்துக்களையும், பல்வேறு வடிவங்களில் தமிழீழப் பத்திரிகைகளுக் கூடாகக் கொடுக்க, விடுதலை விரும்பிகள் பலர் முயல்கின்றார்கள்.

அவ்விதமாக சிலர் கொடுத்த படைப்புகளிலுள்ள புதிய கருத்துக்களை, புதிய பார்வைகளை, நீக்கி விட்டு அவற்றைப் பிரசுரிப்பதிலேயே எமது பத்திரிகைகள் கண்ணும் கருத்துமாக இருக்கின்றன.

இது மக்களிடம் சரியான கருத்துக்கள் சென்றடைவதை, வேண்டுமென்றே தடுக்கும் செயல்களாகவே கருதவேண்டியுள்ளது. விடுதலைப் போராட்டம் முதிர்ச்சி பெற்றிருக்கும் தற்போதைய காலகட்டத்திலும் கூட தமிழீழப் பத்திரிகைகள் அவ்விதம் நடப்பது அபாயகரமான தொன்றாகும்.

விடுதலைப் போராட்டத்தை விரும்பாத, சமூக மாற்றத்தை ஜீரணிக்க முடியாத, பத்திரிகை நிறுவன உரிமையாளர்களினது மனநிலைகளையும், அவற்றில் தொழில் புரிகின்ற பத்திரிகை ஆசிரியர்களினது விருப்பு வெறுப்புக்களையும், எப்படி நாதுக்காக மக்கள் மீது செலுத்துகின்றார்கள் என்பதற்கு அதிசிறந்த உதாரணமொன்றைப் பார்ப்போம்.

28.12.90 - அன்றைய முரசொலிப் பத்திரிகையின் உட்பக்கத்தில் ஒரு கட்டுரை வெளிவந்தது. கோட்டையில் வீரமரணமடைந்த வீர வேங்கை "பௌா" வினது (கிளிற்றன் நிர்மலன் -பண்டிவிருச்சான்) நினைவாக ஒரு போராளி எழுதி அனுப்பிய கட்டுரை அது.

அக்கட்டுரை மூலம், அப்போராளி எத்தகைய கருத்துக்களை மக்களுக்கு சொல்ல விரும்பினாரோ அந்தக் கருத்துக்களை அப்படியே நீக்கிவிட்டு "இறக்கையில்லாத கோழியொன்றை உலாவவிட்டதைப் போல" அக்கட்டுரை பிரசுரிக்கப்பட்டிருந்தது.

www.tamilarangam.net



அந்தக்கட்டுரையை அப்படியே கீழே தருகின்றோம். அதில் பிரசுரிக்கப்படாத வரிகளை, அதன் இடத்திலேயே அடிக்கோடிட்டுக் காட்டி இனம் காட்டுகின்றோம்.

அவன் சிறுவன்தான். பாடசாலைக் கல்வியை இடை நடுவில் மறுத்து போராட்டத்துக்குள் நுழைந்தவன்.

"தான் இயக்கத்திற்குப் போனால் செத்துவிடுவேன்" என்று நினைத்துக் கொண்டுதான் இயக்கத்திற்கே வந்தவன். ஆனால், அவன் தொடர்ந்தும் கல்வி கற்றலையும், தேடலையும் விடவில்லை. படித்தான்... தெரிந்தவரிடத்தில் கேட்டான். காலப்போக்கில் அவன் ஒரு சாதாரண மனிதனின் அறிவை விட அதிகமாகப் பெற்றிருந்தான்.

ஜெயவர்த்னாவின் பட்டப் பெயரையும், பண்டாரநாயக்காவின் அரசியற் திருமணத்தைப் பற்றியும் அவன் அறிந்திருந்தான்.

லெனினைப் பற்றியும், ரொக்சியைப் பற்றியும், ஜார் மன்னனைப் பற்றியும் அறிந்திருந்தான்.

காந்தியின் உண்மைத் தன்மையைப் பற்றி ஆராயும் அறிவைப் பெற்றிருந்தான்.

தந்தை செல்வாவையும், அமிர்தலிங்கத்தையும் வேறுபடுத்திப் பார்க்க அவனுக்குத் தெரிந்திருந்தது.

போர்முறையுடன் இந்த நாட்டின் வரலாற்றைப் பற்றியும், அரசியலைப் பற்றியும் பெனா தெரிந்திருந்தான். ஒரு மனிதனின் ஒழுக்கமான, கண்ணியமான வாழ்வு முறையைக் கற்றிருந்தான்.

பொதுவாக, துட்டகைமுனுவையும், பராக்கிரபாகுவையும் தெரிந்த மாணவனுக்கு சங்கிலியனையும், பண்டார வன்னியனையும், தெரிந்திருப்பதில்லை.

ஜான்சிராணியையும், பிரான்சு தேசபக்தையான ஜோன் ஓவ் ஆர்க்கையும், தெரிந்தவர்களுக்கு, நல்ல நாச்சனையும், அரியாத்தாவையும் தெரிவதில்லை.

எமது தேசத்தைப் பற்றி, அதன் பெருமைகளைப் பற்றி தெரியாதவர்கட்கு எமது தேசத்தில் பற்று வருவதற்குரிய சாத்தியப்பாடு இல்லைத்தான்.

ஆனால் ஒரு போராளி கற்கும் பொழுது தன் தேசத்திற்குத் தேவையானதை கற்கின்றான். தன் போராட்ட வாழ்வுமுறைக்குத் தேவையானதைக் கற்கிறான் - கல்வியை தன் தேசத்திற்கு தேவையானதாக்குகின்றான்.

சின்ன வயதிலேயே போரின் பெருஞ் சுமை பெனா மீது செலுத்தப்பட்டது, ஏதோ உண்மைதான். ஆனால் அதனை அவன் விரும்பி ஏற்றுக் கொண்டான்.

தன்னுடன் வாழ்ந்த - சண்டை பிடித்த போராளிகளின் சாவைப் புரிந்துகொண்டு போராட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்குரிய மனப்பக்குவம், அவனுக்கு ஏற்பட்டிருந்தது.

சாவுகளைக் கண்டு அவன் மரத்துப் போகவில்லை. நிதர்சனத்தைப் புரிந்து கொண்டதால், சாவு இந்த மண்ணுக்கு தவிர்க்க முடியாதது என்பதை விளங்கிக்கொண்டதால் தான், மரணங்கள் அவன் வாழ்வுத் திசையை மாற்றவில்லை.

போராளி என்பவன் மக்களை மிகவும் நேசிக்கும், மக்களின் பிரதிநிதி. அதேநேரம் தன் தோழர்களுக்கிடையே மிகவும் நெருக்கமாகி விடுபவன். அவர்கள் ஒரே இலட்சியத்தையும், ஒரே வழிமுறைகளையும் கொண்டவர்கள். வெற்றி அவர்களை உற்சாகப்படுத்தும். இழப்புக்கள் அவர்களை வாட்டும். வெற்றியைக் கண்டு இறுமாப்படையவும், தோல்விகளையும், துயரையும் கண்டு துவண்டு போகவும், அவர்கள் சாதாரண மனிதர்களாக இருக்கவில்லை. ஒரு போராளியாக அதாவது உண்மையை விளங்கிக்கொண்ட மனிதர்களாக இருந்தார்கள்.

பெனாவை மாதிரித்தான் அவனுடைய வயதையொத்த ஒவ்வொரு போராளியும் இந்த மண்ணின் தேவைகளைப் புரிந்துகொண்டவர்கள். அதனால்தான் சின்ன வயதில் தமக்காக இலட்சக் கணக்கான அவர்களது இனத்தவர்களுக்காக வாழ்ந்தார்கள்.

எவ்வளவுதான் அறிவிருந்தாலும், வயதிற்குரிய சில இயல்புகளையும் அவர்கள் மீறவில்லை. சின்னப் பிரச்சனைகளுக்காகச் சண்டையிடவும் -அழவும் தவறவில்லை.

மோட்டார் சைக்கிளையும், வானையும், இன்னும் எல்லாவற்றையும் இயக்கிப் பார்க்கவும் அவர்கள் தவறவில்லை.

ஆனால், ஒரு வயதிற்கு மீறிய அறிவும், அனுபவமும் அவர்கள் பெற்றது உண்மை. ஓர் உயர் வகுப்பு மாணவனை விட அதிகமாக அவர்கள் கற்றுக்கொண்டார்கள். ஆனால் ஒழுக்கத்திலும், பண்பிலும் மனித நேயத்திலும் அவர்கள் இந்த உலகத்தில் ஒருவருடனும் ஒப்பிடமுடியாதவர்களாக உயர்ந்து நிற்கின்றார்கள்.

மேற்குறித்த கட்டுரை வெறும் புகழ்ச்சிக்காக எழுதப்பட்ட கல்வெட்டு விருத்தம் அல்ல.

வீரமரணம் அடைந்த "பெனா" என்றொரு போராளியை மையமாக வைத்து எமது சமுதாயத்திற்கு கொடுக்க வேண்டிய உண்மைக் கருத்துக்கள் சுலபமாக விளங்கிக் கொள்ளக்கூடிய விதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

இந்த 17 வயதுப் போராளி யாழ் கோட்டை காவலரனில் கடமையாற்றியபோது அவனது மனதில் தெறித்த கருத்துக்களை தனது கைப்பட குறிப்பேடொன்றில் எழுதி வைத்திருந்தான். அந்தக்குறிப்பேட்டை ஈழநாதம் பத்திரிகை மூலம் ஏற்கெனவே மக்களுக்குத் தெரியப்படுத்தியிருந்தோம்.

பிரசுரிக்கப்படாது நீக்கப்பட்ட வாசகங்களையும் அதன் அர்த்தங்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களையும் ஒருங்கே சேர்த்துப் பார்ப்போம்.

*** காந்தியின் உண்மைத்தன்மைபற்றி..................**

*** ஒரு மனிதனின் ஒழுக்கமான, கண்ணியமான, வாழ்வுமுறையை கற்றிருந்தான்.**

*** எமது தேசத்தைப்பற்றி, அதன் பெருமைகளைப்பற்றித் தெரியாதவர்களுக்கு எமது தேசத்தில் பற்றுவருவதற்குரிய சாத்தியப்பாடு இல்லைத்தான்.**

*** ஒரு போராளி கற்கும்பொழுது தன் தேசத்திற்குத் தேவையானதைக் கற்கின்றான். தன் போராட்ட வாழ்வுமுறைக்குத் தேவையானதைக் கற்கின்றான். கல்வியைத் தன் தேசத்திற்கு தேவையானதாக்குகின்றான்.**

*** ...... ஒரு போராளியாக, அதாவது உண்மையை விளங்கிக்கொண்ட மனிதர்களாக இருந்தார்கள்.**

இந்திய தேசப்பிதா காந்தியை எழுந்தமானமாக விமர்சிக்க மேற்குறித்த சொற்றொடரை அப்போராளி பாவிக்கவில்லை. வரலாற்றை அப்படியே மனப்பாடம் செய்வதைவிட, ஆய்வுடன் வரலாற்றை அறியவேண்டும் என்பதற்காகவே "காந்தியின்" என்ற சொற்றொடரை அவர் பாவித்திருந்தார்.

ஆனால் அர்த்தம் நிறைந்த அந்த வார்த்தைப்பிரயோகத்தை நீக்கிவிட்டு "சத்திய வாழ்வுபற்றி" என்று மாற்றி அடிப்படைக் கருத்தையே கொலை செய்துவிட்டார்.

அமையப்போகும் சமுதாயத்திற்கு போராளிகளே முன்னுதாரணமாக இருக்கவேண்டும் -இருக்கமுடியும். அதற்கான ஒழுக்கம், கண்ணியம், சமுதாயவாழ்வு என்பன போராளிகளிடம் நிரம்பப்பெற்றிருக்கவேண்டும். அவர்கள்தான் இந்தப்புதிய சமுதாயத்தின் உண்மை மனிதர்கள். அந்த உயர்ந்த மனிதர்களுக்கே உரிய ஒழுக்கம், கண்ணியம், சமுதாயவாழ்வு முறைகளை தனது போராட்ட வாழ்வில் ஒரு போராளி கற்கின்றான்.

இந்த உன்னத சமுதாய தேவை, குறிப்பிட்ட பத்திரிகை நிறுவனத்தின் பார்வையில், அவசியம் அற்றதாகக் கருதப்பட்டு நீக்கப்பட்டிருக்கின்றது.

ஒரு மாணவன் எதைக் கற்க வேண்டும்? அந்தக்கல்வியின் பயன்பாடு எதற்குச் சேவை வேண்டும்? என்ற கேள்விகளுக்கான புரட்சிகரமான விடைகள் மக்கள் அறியக்கூடாததொன்றாகக் கருதப்பட்டு நீக்கப்பட்டிருக்கின்றது.

இதற்கு முன்னரும் "ஒரு போராளியின் பார்வையில் கல்வி" என்ற தலைப்பிட்டு முரசொலி ஒரு கட்டுரையை பிரசுரித்திருந்தது. அதன் அடிப்பகுதியில் கோட்டையில் வீர மரணமடைந்த பிரதீபனின் குறிப்பேட்டில் இருந்த "போராட்டமே எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றது" என்ற வாசகத்துடன் கட்டுரை முடிக்கப்பட்டிருந்தது.

ஆனால் 20.11.1990 அன்று பிரசுரமாகிய அந்தக்கட்டுரையில் மேற்குறித்த வாசகம் நீக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

அடிமை மனோபாவத்துடன் கூடிய சுயநலத்துடன் வாழமுனையும் ஒரு தனிமனிதனுக்கு இருக்கத் தேவையற்றதை இருக்கமுடியாததை கட்டுரையில் இருந்து விலக்கியிருக்கின்றார்கள்.
"கருத்துக்கள்" மக்களின் சிந்தனைகளையும், செயற்பாடுகளையும் நிர்ணயிக்கும் அபார சக்தி படைத்தவை.
இத்தகைய பிற்போக்குத்தனமான பத்திரிகை நிறுவனங்களின் பார்வையில் சமூகமேம்பாடோ அல்லது தியாக மனப்பான்மையோ தேவையற்றதுதான். ஒட்டுமொத்தத்தில் மாற்றங்களை இவர்களால் ஜீரணிக்கமுடியவில்லை. பழைய சிந்தனைகளில் இருந்தும், சமுதாய நோக்கற்ற பார்வைகளில் இருந்தும் மீளவிரும்புகின்றார்களில்லை.

போராட்ட காலகட்டத்திலும் சினிமா நடிகைகளைப்பற்றி எழுதுவதிலேயேதான் காலத்தை ஓட்டுகின்றார்கள்.

மேலும், எமது மக்களை கிலிகொள்ளச் செய்யவும், போராட்டத்தின் வெற்றியில் அவர்களிற்கிருக்கும் நம்பிக்கையைச் சிதைக்கச்செய்யும் நோக்குடனும் ஸ்ரீலங்கா அரசு செய்ய வேண்டிய பிரச்சாரத்தை இங்கே, தலைப்புச் செய்தியாகப் பிரசுரித்து அரச விசுவாசத்தைக் காட்டிக்கொள்ள முற்படுவதும் பத்திரிகா தர்மத்துக்குச் செய்யும் துரோகங்களாகும்.

இத்தகைய பத்திரிகைகளின் உரிமையாளர்களினதோ, அல்லது ஆசிரியர்களினதோ தனிமனித உணர்வுகளைப் பற்றி நாம் அலட்டிக் கொள்ளப் போவதில்லை. ஆனால் பிரச்சனை எங்கே எழுகின்றது என்றால்.... இத்தகைய மனோநிலை கொண்டவர்கள் மக்களுக்குக் கருத்துக்களைக் கூட்டவேண்டிய பத்திரிகைகளின் உரிமையாளர்களாகவும், ஆசிரியர்களாகவும் இருப்பதுதான் சமூகத்தீங்கானது.

இத்தகையவர்களின் குறுகிய நோக்கம் கொண்ட சொந்த விருப்பு - வெறுப்புக்கள் பத்திரிகைகளின் கருத்தாகப் பரிணமிக்கும்போது மக்கள் விழிப்புணர்ச்சி பெறுவதிலிருந்து தடுக்கப்பட்டு விடுகின்றார்கள்.

இப்பொழுது தமிழீழ விடுதலைப் போராட்டம் வீறுடன் வெற்றிநடை போடுகின்றது. இந்தப் போராட்டத்தின் நேரடி விளைவாக எமது மக்கள் சொல்லொணாத் துயர்களை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அடைகின்றார்கள்.

அந்தத் துயர்களையும், அழிவுகளையும், நிர்ப்பந்தங்களையும் எதிர்கொண்டபடியேதான், விடுதலை பெற்ற புரட்சிகரமான சமுதாயம் ஒன்றை அமைக்கப் பாடுபடுகின்றோம்.


சாதிவெறிகள் அற்ற, மூடநம்பிக்கைகள் களையப்பெற்ற, பிற்போக்குச் சிந்தனைகளில் இருந்து விடுபட்ட, மதவெறி இல்லாத, சமூக உணர்வுகள் மேலோங்கிய தமிழீழ சமுதாயத்தைப் படைக்க முயலுகின்றோம்.

பத்திரிகைகளுக்கிருக்கும் சமூகப் பொறுப்புக்களை, தார்மீகக் கடமைகளை பத்திரிகை நிறுவனங்கள் புரிந்து கொள்வதோடு இந்த உயர் பொதுநோக்கிற்கு தமிழீழத்தின் பத்திரிகைகள் தங்களையும் அர்ப்பணிக்க வேண்டும்.

மேற்குறித்த சமுதாய இலட்சியங்களை ஏற்றுக்கொள்ளாத நடைமுறைப்படுத்துவதற்கு தடையாகவுள்ள, பத்திரிகை நிறுவனங்களோ, அல்லது பத்திரிகை ஆசிரியர்களோ, தமிழீழ மக்களை தவறான வழிக்கு இட்டுச்செல்லக்கூடிய கருத்துக்களையே தொடர்ந்தும் மக்கள் மத்தியில் பரப்புவார்கள்.

இந்த எச்சரிக்கையை தமிழீழ மக்களுக்கே சமர்ப்பிக்கின்றோம்.

## பிரித்தானியாவிலிருந்து திரு. கிட்டுவை வெளியேற்ற முயற்சி: பின்னணி என்ன?



சதாசிவம் கிருஷ்ணகுமார் கிட்டு, தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினர். சிறீலங்கா அரசாங்கத்தோடு, விடுதலைப் புலிகள், பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்த வேளை, 1989 ம் ஆண்டு அக்டோபர் மாதம் செயற்கைக் கால் ஒன்றைப் பொருத்தும், வைத்திய நோக்கிற்காக லண்டன் வந்தார். அவரை இம்மாதம் 7ம் திகதிக்கு முன்னர் நாட்டை விட்டு வெளியேறுமாறு பிரித்தானிய அரசாங்கம் கேட்டுள்ளது. பிரித்தானியாவின் சிறந்த, அகதிகள் தொடர்பான சட்ட அறிஞர் டேவிட் பேஜஸ், இந்த வழக்கை நடத்தி வருகின்றார். இவரது கோரிக்கையின் பேரில் வெளியேறுவதற்கான காலக்கெடு 14 நாட்களுக்கு, ஆகஸ்ட் 21ம் திகதிவரை பின்போடப்பட்டுள்ளது. வெளியேற்ற ஆணையை பிரித்தானிய உள்நாட்டு அமைச்சகம் வழங்கவில்லை. அவரது அகதி அந்தஸ்த்துக் கோரிக்கை விண்ணப்பத்தை நிராகரிக்க மனங் கொண்டுள்ளதாகவும் உள்நாட்டு அமைச்சகக் கடிதம் தெரிவிக்கின்றது. திரு கிட்டு லண்டனில் வைத்தியம் பெற்று வரும் வேளையில், 1990 யூன் மாதம் மீண்டும் விடுதலைப் புலிகளுக்கும், அரச படைகளுக்கும் இடையில் போர் மூண்டதும், கிட்டு தனது நாட்டிற்கு திரும்பமுடியாத சூழ்நிலை ஏற்பட்டதும் இங்கு குறிப்பிடத் தக்கது. கிட்டு லண்டனில் பணம் சேர்த்து, தனது அமைப்பிற்காக ஆயுதங்களை வாங்கினார் என்ற ஆதாரமில்லாத குற்றச்சாட்டுக்களை பிரித்தானிய அரசாங்கம் சுமத்தியுள்ளது. பிரித்தானிய சட்டத்திற்கு விரோதமான காரியம் எதனையும் செய்ய வில்லை எனவும், அரசியல் ரீதியாகவே தான் செயற்பட்டு வந்ததாகவும், விடுதலைப் புலிகளுக்கும், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் எதிரான சக்திகளினால் தவறாக பிரித்தானிய உள்நாட்டமைச்சகம் அறிவுறுத்தப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறீலங்கா அரசாங்கம் தான் கைது செய்த, பல்லாயிரக் கணக்கான இயக்கப் போராளிகளையும், அரசியல் கைதிகளையும், சட்டத்துக்கு புறம்பாகக் கொன்று குவித்துள்ளதாகவும், இந்நிலையில் சிறீலங்காவிற்கு அனுப்பப்பட்டால், தான் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப் படுதல் உறுதி என்றும் அவர் லண்டன் கார்டியன் பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார். இந்தியாவில் தான் இருக்கும் போது, கைது செய்யப்பட்டு, யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டிய கிட்டு, தான் இந்தியாவிற்கு போகப் போவதில்லை என்றும் கூறியுள்ளார்.

பிரித்தானிய அரசாங்கத்தின் இந் நடவடிக்கைக்குப் பின்னணி என்ன? சிறீலங்கா அரசின் தூண்டுதலாக இருக்குமா? சிறீலங்கா அரசாங்கம் கிட்டுவை, நாடுகடத்துமாறு, பல முறை கேட்டிருந்த போதும், பிரித்தானிய தூதுவரை, சிறீலங்கா அரசாங்கம் நாடுகடத்தியது தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள கசப்பு, இத்தகைய நடவடிக்கைக்கு உந்துதலாக இருக்க முடியாது. எமது பிராந்தியத்தில் இன்னொரு பெரிய அரசு, கிட்டுவை நாடு கடத்துமாறு தூண்டியிருக்க வேண்டும் என்பதே அரசியல் நோக்கர்களின் கருத்தாகும். அவ்வரசின் அளவு, சனத்தொகை, சந்தை நிலைமை, வெளிநாட்டு மூலதனத்திற்கு அதன் பொருளாதாரம் திறந்து விடப் பட்டுள்ளமை என்று பார்க்கும் போதும், சமாதான மத்தியஸ்தத்தில் ஐரோப்பிய நாடுகளின் தலையீட்டை உடைக்கும் நோக்கம் அந்நாட்டிற்கு உண்டென்பதையும், வேறு காரணங்களையும் சேர்த்துப் பார்க்கும் போதும் அரசியல் நோக்கர்களின் ஊகமே சரியாக இருக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# நிழலல்ல நிஜம்

- ஜோசி

உப்பிடித்தான் அலுவல் போகும் எண்டு யாருக்கும் தெரியுமே? வெட்கப்படாமல் சொல்லுங்கோ. எண்பத்தி மூண்டு, எண்பத்தி நாலுகளில், அறம்புறமா ஓடித்திரிஞ்சு, கூட்டம் போட்டு, நோட்டீஸ் விட்டு, தடல்புடலா எல்லாம் நடக்கேக்க கனவிலயும் யோசிச்சிருக்க மாட்டியள்.

தலைவாராமல், தாடி மீசையளோட, தோள் பையுக்க புத்தகங்களை நிரப்பிக்கொண்டு, சைக்கிளில ரவுண்ட் அடிக்கேக்க ஆருக்குத்தான் கரவு வரும்.

பேச்சிலயும், எழுத்திலயும், அவங்கள் குடுத்த "போஸ் "லயும், சைட்டால குடுத்த "லுக்" கிலயும் சொக்கிப் போனது உண்மைதானே? வெட்கப்படாமல் ஒத்துக் கொள்ளுவம். பெரிய அறிவாளியள் எண்டும், உலகத்தைப் புரட்டக்கூடிய ஆக்கள் எண்டும், அவங்கள் பெரிசாகச் சொன்னதில எப்பனெண்டாலும் நம்பினாங்கள் தானே, சங்கயீனமாக் கிடக்கு; எண்டாலும் காரியமில்ல ஒத்துக்கொள்ளுவம்.

அவங்கட போக்குவரத்துக்களப் பாத்து, எடுப்புச் சாய்ப்புகளப் பாத்து, பொலிசுக்குத்தான் ஆக்களைச் சேக்கிறாங்கள் எண்டு எந்த மேதாவியாலயும் சொல்லியிருக்கமுடியாது. கனகச்சிதமா அலுவலக் கொண்டு போட்டாங்கள். ஆனால், எங்கட பொடி பொட்டையள எல்லே நாசமாக்கிப் போட்டாங்கள். இப்ப என்னடாவெண்டால் கொழும்பில இருந்து கொண்டு அலுகோசு வேலையள் செய்யிறாங்கள்.

புரட்சி எண்டாங்கள், விடுதலை எண்டாங்கள், சுதந்திரக்காற்று எண்டாங்கள், அடிவானம் சிவக்கும் எண்டாங்கள், ..... இன்னும் என்னவோ எல்லாம் .... விசர் தான் வருகுது. பின்ன என்ன, தங்களுக்கு கொஞ்சமும் தொடர்பில்லாத விசயங்களைச் சொல்லிச் சொல்லி, எங்களைப் பேய்க்காட்டிப் போட்டாங்கள்; பின்னால எந்தக் கோலத்தில வரும் எண்டு தெரியாமல் எங்கட தாய்தகப்பன் பிள்ளையளுக்கு பேர் வைக்கிறமாதிரி போயிற்று. தேன்மொழி எண்டு பேர் வைக்கிற பிள்ளை, பேசமுடியாத ஊமையாப் போறமாதிரி; தருமி, கடைந்தெடுத்த கஞ்சனாப் போறமாதிரி; செல்வம், சிலவேளை சொல்லிவைச்சு பரம ஏழையா வாறமாதிரி; பூங்கொடி, உப்பிப் பெருத்து விளையிறமாதிரி, இப்பிடி தலையங்கங்களுக்கும் உள்ளடக்கங்களுக்கும் தொடர்பில்லாத தவறுகள் நடக்கிறது சகசம்தானே. உப்பிடியான தவறுகள் திட்டமிட்டு நடக்கிறதில்ல; ஆனால் கள்ளக் கோஷ்டியளின்ட விளம்பர விளையாட்டுக்கள் எல்லாம், திட்டமிட்டு, பொதுச்சபை, செயற்குழு, அது இது எண்டொல்லாம் கூட்டி எடுக்கிற தலைச்சுத்து விளையாட்டு. திட்டமிட்டுப் பேய்க்காட்டிப் போட்டாங்கள். நாங்களும் கிறுக்குத்தனமா, அவங்களையும் நம்பினனாங்கள். சரி காரியமில்லை எண்டு எப்பன் மூச்சு வாங்கிறதுக்குள்ள, கிறுதி எல்லே வருகுது.

கொழும்புப் பாதுகாப்பு என்கிறாங்கள், பயிற்சி எடுத்து, சிங்களக் கிராமங்களுக்கு "சென்றி" நிக்கிறாங்கள்; சிங்கள ஆமியோட சேர்ந்து ரோந்து திரியிறாங்கள். என்ன நாசமறுப்பு.

ஓவ்வொரு குழுவும், நூறுநூறு பேராக் குடுத்து, பிரேமதாசாவைக் குசிப்படுத்துறாங்கள்; தொடர்ந்து கொழும்பில இருக்கவெல்லே வேணும்.

விசம் ஏறுகிற விசயம் என்னண்டா, சிங்களப் பயங்கரவாதத்திடம் இருந்து, தமிழ்மக்களைக் காக்கப்போறமெண்டு சிலிர்த்தெழுந்த சிங்கங்கள், இண்டைக்கு என்னடாவெண்டால், தமிழங்களிட்ட இருந்து, சிங்கள நாட்டைக் காப்பாத்தப் போறாங்களாம்.

பிரேமதாசாவுக்கு தேர்தல் வேலை செய்தாங்கள்; நீரோட்டத்தில கலந்தவங்கள் தானே காரியமில்லை.

பிரேமதாசாவை வெல்ல வைச்சதுக்கு, மக்களுக்கு நன்றி தெரிவிச்சாங்கள்; பிரேமதாசாவும் தன்னை வெல்ல வைச்சதுக்கு இவங்களுக்கு திருப்பி நன்றி தெரிவிச்சிட்டார். நன்றி மறப்பது நன்றல்ல, உப்பிட்டவரை (உயிர்) உள்ளளவும் நினை எங்கிற மாதிரி.

யோசிச்சுப் பாத்தா, எல்லாம் சாமத்தில வாற பேய்க் கனவுகள் மாதிரி; ஆனால் எல்லாம் பிசகில்லாத உண்மைகள்.

சர்வாங்க நமஸ்காரம் செய்து, நிலத்தில உருண்டு புரண்டு, இந்தியன்ர காலப்பிடிச்சு, நாக்கால நக்கி,
உனக்காக ஆள் கொன்ற
எனை ஆட்கொண்ட,
கண்கண்ட பராபரமே, பரம்பொருளே,
நின்காலில் நினைவிழுக்கும் பூவாசம் வீசுகிறதே,
பூவே! பூவின்வாய் வழிகின்ற தேனே!
தேடற்கரிதான திரவியமே!
நீ செல்கையிலே மறக்காமல் எனையும் அழைத்துச் செல் எம்பிரானே!

www.tamilarangam.net



எண்டு இந்தியன்ர காலுக்கடியில விழுந்து கிடந்து, பஜனை போடேக்க விளங்கியிட்டுது; இந்தியா கைவிட்டுட்டா, எந்துப்படுற இன்னொரு தொங்கலில தொத்தக் கூடிய கோஷ்டியள் எண்டு. ஆனால் இவ்வளவு சீக்கிரத்தில, கூசாமல் போய் சிங்கத்தின்ர வாலில தொங்குவினம் எண்டு ஆரும் நினைச்சுப்பாக்கேல்ல.

கொழும்பில, எங்கட சனங்களை விசாரிக்கிறது, கைது செய்யிறது, விசயம் கறக்கிறம் எண்டு வெருட்டி பணம் கறக்கிறது, உயிர் பறிக்கிறது எல்லாம் இப்ப உவைதான். சிங்களவனுக்கு அலுத்துப் போச்சுது; எத்தனை நாளைக்கெண்டுதான் அவனும் மொங்கிறது. இப்ப "டியூட்டி" மாறிட்டினம்.

அரசாங்கத்துக்காக, வெளிநாட்டுக்காரங்களைச் சந்திக்கிறது, அறிக்கைகள் விடுறது, பேட்டியள் குடுக்கிறது எல்லாம் இப்ப இவைதான்; நல்ல முன்னேற்றம்.

இருந்து போட்டு கொழும்பில இருந்துகொண்டு பைம்பல் அறிக்கைகள் விடுவினம். கொழும்பில குண்டுவெடிச்சா,அல்லது புலியள் காம் ஏதும் அடிச்சிட்டா, அரசில உள்ள கரிசனையோட, அழுதுவடியிற அறிக்கைகள் விடுவினம். அல்லது எங்கையெண்டாலும் சண்டை வலு பலமா, போட்டியா நடந்து கொண்டிருந்தா உணர்ச்சி வசப்பட்டு அறிக்கை விடுவினம்; தெருவில கலகம் எண்டால், வேலிப் பொட்டுக்குள்ளால தலையை நுளைச்சுக்கொண்டு, வாலைப் போட்டு முறுக்கிக்கொண்டு, தொண்டை கிளிய வாள் வாள் எண்டு குரைச்சுக்கொண்டு, குட்டி நாயள் வீரம் காட்டுறதில்லையா? அதுமாதிரி. பார்த்தா சிரிப்பாய் இருக்கும்; எத்துப்பட்டால் படிச்சுப் பாருங்கோ பைம்பலாய் இருக்கும். நல்ல தமாசு.

சிங்கள ஆமிய வெல்ல முடியாதாம்; புலியள் மூளைக் கிறுக்கில சண்டை பிடிக்கினம், தோக்கப்போகினமாம். கும்பலில கோவிந்தா எண்டு ஆயுதம் தூக்கின ஆக்கள்தானே உவங்கள். எப்பன் முஸ்டி வீங்கியிருந்தா சரணாகதியாகிற கோஷ்டியளுக்கு, வீரத்தப்பற்றியும், வெற்றியப்பற்றியும் என்னண்டு தெரியும். இராணுவ, அரசியல் விஞ்ஞானத்தை அப்பிடியே கரைச்சுக் குடிச்சிட்டு, செமியாக் குணத்தில ஓடித்திரியிறாங்கள் போல கிடக்கு.

இன்னொரு விசயத்தையும் கையோட சொல்லவேணும்; கொக்கட்டிச் சோலையில, நூற்றி அறுபதுக்கும் மேல, எங்கட சனங்களை துடிக்கத் துடிக்க ஆமிக்காரங்கள் கொண்டவங்கள் எல்லே. மிருகசாதியள் மாதிரி எங்கட சனங்களை வேட்டையாடிப் போட்டு..... இந்தக் கொடுமையளைக் கேட்க ஆக்களில்ல....., ஆனால் இந்த நாசமாப் போவாங்கள், கொழும்பில இருந்துகொண்டு, அரசுக்கு புத்திமதி சொல்லுறாங்கள்; இப்பிடி ஆமி கொல்லுறது ஆமியின்ர புனிதத்தைக் கெடுத்துப் போடுமாம், புலிகளுக்கும் ஆமிக்கும் வித்தியாசம் இல்லாமல் போயிடுமாம்.

தொங்கல இறுக்கித்தான் பிடிக்கிறாங்கள். ஆனால் எங்கட சனங்களின்ர தொண்டையையும் சேர்த்தெல்லே பிடிக்கிறாங்கள்.

கொழும்பில சீவியம். V.I.P க்கள் மாதிரி உலாத்தல். அரசின்ர பாதுகாப்பு ஏற்பாடுகள். இன்னும் எத்தினை நாளைக்கெண்டு பாப்பம். ●



சொல்வதற்கான சிறந்த வழி
செய்து காட்டுவதே

- சேகுவாரா -

www.tamilarangam.net




# தேசிய எழுச்சிக் களம்

**யூகோஸ்லாவியா - அரசியல் ஆய்வு**

இவ்வருடம் யூன் மாதம், உலகில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தவல்ல முக்கிய நிகழ்ச்சி ஒன்று கிழக்கு ஐரோப்பாவில் நடந்தது. அதாவது யூகோஸ்லாவியா குடியரசின் மாநிலங்களாக இருந்த ஸ்லோவேனியா, குரோஷியா ஆகியவை தனிநாட்டுச் சுதந்திரத்தைப் பிரகடனம் செய்து கொண்டன. தேசிய இனங்கள் தங்கள் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டும் போக்கு, காலனித்துவத்தின் வீழ்ச்சியோடு ஆரம்பித்துவிட்டதாயினும், அது குறித்த வரையறைகளை ஏற்படுத்தவோ, சர்வதேச மனிதாபிமான சட்டத்தினுள் அதற்கான தெளிவான வரைவிலக்கணங்களை வரையவோ, ஐக்கிய நாடுகள் சபையின் நியாயவரம்பிற்குள் கொண்டுவந்து தீர்வுகளைக் காணவோ முயற்சிகள் எடுக்கப்படவில்லை. ஏனெனில், தற்போது ஐ. நா. சபையினுள் அங்கம் வகிக்கின்ற அரசுகளிற்கு எதிராக உள்ளே கிளர்ந்த தேசிய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்கள், காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுபட்ட பல 3ம் உலக நாடுகளிலேயே இடம் பெற்றன. புதிய அரசுகளின் பெருக்கத்தை பல்வேறு காரணங்களுக்காக விரும்பாத மேற்குலகம் பாராமுகமாக இருந்தது. வல்லரசுகளுக்கெதிராக எண்ணிக்கையில் பலமுடைய பல நாடுகள் உருவாகுதல், சர்வதேச அமைப்புக்களில் வல்லரசுகளின் எதேச்சாதிகாரப் போக்குகளுக்கு சவாலாக அமையும் என்றும், அவற்றில் பலவற்றைத் திருப்திப்படுத்தும் செயற்பாட்டில், நிதி, பொருளாதார, இராணுவ உதவி என்பதன் பேரிலும், கையூட்டு என்பதன் பேரிலும் ஏராளமான நிதி தேவைப்படும் என்றும், பிரிட்டன், பிரான்ஸ், ஸ்பெயின், ரஷ்யா போன்ற நாடுகளில் நிலவுகின்ற தேசிய இனங்களின் பிரச்சினை எழுச்சி கொள்ளலாம் என்ற காரணத்தினாலும், உலகின் தென்பகுதியில் நடைபெறும் தேசிய இன விடுதலைப் போராட்டங்கள் சமாளிக்கப்பட்டன; நாடுகளுக்குள் தீர்வுகளைக் காண்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. தாமே சண்டை பிடித்துத் தீர்க்குமாறு விடப்பட்டன. அல்லது, இப்போராட்டங்கள், அடக்குமுறை அரசுகளுக்கான மறைமுக ஆதரவுடன் அழித்தொழிக்கப்பட்டன. தற்போது கிழக்கு ஐரோப்பாவில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி, மேற்குலகத்தை கிலிகொள்ளச் செய்துள்ளது. கிழக்கைரோப்பாவில் கொம்யூனிசத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட தோல்வியையும், பனிப்போரில்(Cold war) ரஷ்ய முகாம் மேற்குலகிடம் அடைந்த தோல்வியையும் தொடர்ந்து, பல்வேறு இன மக்கள் தங்கள் தேசிய விடுதலையை, பூரண சுதந்திரத்தை முன்வைத்துப் போராட முன்வந்தனர். இதன் விளைவுகளில் ஒன்றே யூகோஸ்லாவியப் பிரச்சனையாகும். ஸ்லோவேனியா, குரோஷியா ஆகியவற்றின் சுதந்திரப் பிரகடனத்தைத் தொடர்ந்து, இனிமேல், அந்நாட்டை யூகோஸ்லாவியா என்றே அழைக்க முடியாது. ஏனெனில் யூகோஸ்லாவியா என்பது பல்வேறு தேசிய இனங்களின் சமஷ்டி அமைப்பாக (FEDERAL) இருந்தது. அது இப்போது அவ்வாறு இல்லை.

## யூகோஸ்லாவியா: பிரச்சனையின் புறவடிவம்




1918ம் ஆண்டு, சேபியர்கள், குரோஷியர்கள், ஸ்லோவேனியர் இணைந்து, அரசனின் ஆட்சி ஒன்றை நிறுவினர். ஒஸ்ரிய -கங்கேரியா சாம்ராட்சியத்தின் சீரழிவிலிருந்தே இந்நாடு உருவாகியது. 1941 இந்நாட்டை கிட்லரின் நாசி ஜேர்மனி கைப்பற்றியது. குரோஷியாவில் ஜேர்மனியின் பொம்மை அரசு நிறுவப்பட்டு, சேபியர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்படவும் நேர்ந்தது. ஆயினும் குரோஷியனாகிய மார்ஷல் ரிற்ரோவின் தலைமையில் "பாட்டிஸான்கள்" என்ற கொம்யூனிச கெரில்லாக்கள், நாசி இராணுவத்தை தோற்கடித்து அனைத்துத் தேசிய இனங்களையும் ஒன்று திரட்டி, 1945 ல் கொம்யூனிச சமஷ்டி நாடொன்றை உருவாக்கி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



னர். அதேவேளை சேபியர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட, ஷெற்னிக்ஸ் என்று அழைக்கப் பட்ட தேசியவாதிகளும் கிட்லருக்கு எதிராக போராடியிருந்தனர். ஆயினும் பின்னர் ரிற்றோவின் பாட்டிஸன்களால் தோற்கடிக்கப் பட்டனர். அவர்களது தலைவனாகிய மிகாயிலோவிச்சும் சுட்டுக் கொல்லப்பட்டார். ரஷ்யத் தலைவரான ஜோசப் ஸ்ரலினுடன் முரண்பட்ட ரிற்ரோ, ரஷ்ய கொம்யூனிஸத்திற்கு மாறுபட்ட தனித்துவமான கொம்யூனிஸ ஆட்சிமுறை ஒன்றை நிறுவினார்.



அடக்குமுறைக் கருவி

இச்சமஷ்டிக் குடியரசில் பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட, சேபியா, குரோஷியா, ஸ்லோவேனியா, மசிடோனியா, பொஸ்னியா, மொன்ரிநிக்ரோ ஆகிய மாநிலங்களும் கொஸோவோ என்ற மாகாணமும் அமைந்திருந்தன. இதுவரை காலமும் ஜனாதிபதியாக இருந்த, ரிற்ரோ, கொம்யூனிஸ ஆட்சியையும், சமஷ்டிக் குடியரசையும் கட்டிக் காத்து வந்தார். அணிசேராநாடுகளின் இயக்கத்தின் உருவாக்கத்திற்கும் காரணமாக இருந்தவர்களில் ஒருவரான ரிற்ரோ 1980 ல் இறந்து போக, கூட்டுத் தலைமை ஜனாதிபதி பதவியைப் பொறுப்பெடுத்தது, அதனைத் தொடர்ந்து பொருளாதார வீழ்ச்சியும் ஏற்பட்டது. 1980 ம் ஆண்டின் பின்னர் சீரழிவுக்கான பாதை திறந்து விட்டது. 1990 பல கட்சி ஆட்சி முறை நடைமுறைப் படுத்தப்படவே ஸ்லோவேனியா, குரோஷியா போன்றவற்றில் கொம்யூனிஸ்ட் அல்லாத ஆட்சிகள் ஏற்பட்டன. கொம்யூனிஸ்ட் கட்சியின் கட்டமைப்பின் ஊடாக பல மானில மக்களையும் இணைத்து வைத்திருந்த ஒற்றுமை சிதறுண்டது. யூகோஸ்லாவியாவில் 40 % மான சேபியர்களின் மேலாதிக்கம் நிலவுவதாக மாநில மக்கள் எதிர்ப்புகளை எழுப்பினர். 1980 ம் ஆண்டின் பின்னர், கொஸோவோ மாகாணத்து அல்பேனிய மக்கள், கூடிய சுய ஆட்சிக்கும், சுதந்திரத்திற்கும் போராடிய போது கூட்டுத் தலைமையில் ஒருவரும் சேபியருமான ஸ்லோபோடன் மிலோசவிக், தன்னிச்சையாகச் செயற்பட்டு, கொஸோவோ மாகாணத்து மக்களை கடுமையாக அடக்கினார். இவ்வடக்குமுறை ஏனைய மாநில மக்களிடத்தும் அச்சத்தை ஏற்படுத்தியது. அரச அதிகாரம், இராணுவத் தலைமை ஆகியவை சேபியரிடமே இருப்பதாகக் கருதப்பட்டது. ஸ்லோவேனிய, குரோஷிய செல்வம் சேபியரால் சுரண்டப்படுவதாகவும் கருதப்பட்டது.

இந்நிலையில் 1990 ம் ஆண்டு ஸ்லோவேனிய, குரோஷிய மாநிலங்களில், மாநில அரசாங்கம் நடத்திய சர்வஜன வாக்கெடுப்பில் 90 % மக்கள் தனிநாட்டுச் சுதந்திரத்திற்கு சார்பாக வாக்களித்தனர். கூட்டுத் தலைமையானது, அரசியல் சட்டத்தை மாற்றி, சமஷ்டி ஆட்சி முறையை இறுக்கம் அற்றதாக்க முற்பட்ட போது ஸ்லோபோடன் மிலோசாவிக்கும், இராணுவமும் தலையிட்டுத் தடுத்தனர். மாறி மாறி வரும் ஜனாதிபதிப் பதவிக்கு குரோஷியரான ஸ்ரிப் மெஸிக்கின் முறை வந்தபோது சேபிய ஆதிக்கம் அதனைத்தடுத்தது. இந்த நிலையிலேயே, ஸ்லோவேனியா, குரோஷியா ஆகியவை சுதந்திரப் பிரகடனத்தை அறிவித்தன. இச்சுதந்திர நாடுகளை ஒஸ்ரியா, ஜேர்மனி ஆகிய நாடுகள் அங்கீகரித்துள்ளன. அதே வேளை ஐரோப்பிய சமூகம் தலையிட்டு, ஆரம்பித்த உள்நாட்டுப் போரை நிறுத்த முடிவு செய்தது. சில நாட்கள் நடைபெற்ற யுத்தத்தில் பல உயிரிழப்புக்கள் ஏற்பட்டன. யூகோஸ்லாவியாவின் சமஷ்டி இராணுவம் பல இழப்புக்களைக் கண்டது. ஆயிரக்கணக்கான சமஷ்டி இராணுவத்தினர், ஸ்லோவேனியா, குரோஷிய காவல் படைகளிடம் சரணடைந்தனர். ஏராளமான ஆயுதக் கிடங்குகளும், சுதந்திர நாட்டுப் படைகளின் கைகளில் சிக்கின. ஸ்லோவேனியாவில்தான் கடுமையான சண்டைகள் இடம் பெற்றன. போல்கன் நாடுகள் என்று அழைக்கப்படும் இப்பகுதியின் ஒரு எல்லையாக அதிரியாற்றுக் கடல் உள்ளது. அக் கடலில் உள்ள தீவான பிறியோனியில் சமாதான மகாநாடு இடம் பெற்றது. ஐரோப்பிய சமூக நாடுகள் நெதர்லான்ட்ஸ், லக்சம்பேக், போர்த்துக்கல் ஆகியவற்றின் வெளிவிவகார அமைச்சர்களின் மத்தியஸ்தத்தின் கீழ், சமாதான பேச்சுவார்த்தை இடம்பெற்றது. இருதரப்பு துருப்புக்களும் தத்தமது முகாம்களுக்கும், வீடுகளுக்கும் செல்ல வேண்டும் என்றும், சண்டை நிறுத்தப்பட வேண்டும் என்றும், யுத்தநிறுத்தம் கண்காணிப்புக் குழுவொன்றால் மேற்பார்வையிடப்படல் வேண்டும் என்றும் தீர்மானமாகியது. வேற்று நாடுகளுடனான எல்லைகளில் ஸ்லோவேனியா, குரோஷியா என்ற புதிய நாடுகள் விதித்து வந்த சுங்கத் தடை, பாதுகாப்பு நடவடிக்கைகள், சமஷ்டி அரசாங்கம், புதிய அரசாங்கங்கள் ஆகியவை இரண்டின் மேற்பார்வையில் நடைபெற வேண்டும் எனவும், வெளியிடப்பட்ட சுதந்திரப் பிரகடனத்தை புதிய நாடுகள் மூன்று மாதங்களுக்கு இடைநிறுத்தி வைப்பதாகவும் அக்கால எல்லைக்குள் சமாதான பேச்சுவார்த்தை மூலம் பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும் என்றும் முடிவு எடுக்கப்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பட்டது. இது குறித்து கருத்து வெளியிட்ட ஸ்லோவேனியா ஜனாதிபதி, மிலான் குச்சான், "சுதந்திரப் பிரகடனத்தை நடைமுறைப்படுத்தல் மூன்று மாதத்திற்கு பிற்போடப்பட்டுள்ளதே தவிர சுதந்திரப்பிரகடனம் அல்ல". என்று கூறினார். மேலும் அவர் கூறுகையில், "ஸ்லோவேனியாவை ஆயுத பலத்தால் நசுக்க முடியாது. மக்களுடைய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இப்பிரகடனம் செய்யப்பட்டுள்ளதால் சுதந்திரம் நிச்சயம்" என்று கூறினார். ஐரோப்பிய சமூகத்தை சுட்டிக்காட்டிய அவர், "சுதந்திரமான, இறமையுடைய குடியரசுகள் பொருளாதார தேவையின் அடிப்படையில் ஒரு சமூகமாக அமைதலும், காலகெதியில் விருப்பத்தின் அடிப்படையில் அரசியல் ரீதியாக இணைதலும் சாத்தியம்" என்று கூறினார். பிறியோனி ஒப்பந்தம் ஏற்பட்டபின், யூகோசிலாவியா சமஷ்டி அரசாங்கம் தனது முழுப்படைகைகளையும் ஸ்லோவேனியாவில் இருந்து முற்றுமுழுதாக வாபஸ் பெறுவதாக அறிவித்துள்ளது. எனவே மூன்று மாதகாலத்தின் பின்னர் ஸ்லோவேனியா சுதந்திர நாடாக அமைவது திண்ணம். இராணுவ ரீதியாக, பலவந்தமாக தேசிய இனங்களின் மீது தீர்வுகளைத் திணிக்க முடியாது என்பதே கண்ணியமான யூகோஸ்லாவியா அரசாங்கத்தின் முடிவாக உள்ளது. குரோஷியாவைப் பொறுத்தவரை என்ன நடக்கும் என்று தெரியவில்லை. குரோஷியாவில் 11.5 வீதமான சேபியர்கள் உள்ளார்கள். அவர்கள் தங்களுடைய சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று கோருகின்றனர். குரோஷிய அரசாங்கம் அவர்களை தனது நாட்டுக்குள் உள்ள தேசிய சிறுபான்மை என்று கூறுகின்றது. இம் முரண்பாடுகளினால், குரோஷியர்களுக்கும் இராணுவத்தின் ஆதரவுடன் சேபியர்களுக்கும் பல இடங்களில் மோதல்கள் நடந்து, இரத்தக் களரிகள் ஏற்பட்டுள்ளன. குரோஷியாவிலுள்ள சேபியப் பகுதி பிரிக்கப்படுமா, சேபிய மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்படுவார்களா, அல்லது சேபியர்களின் நலன்களைப் பாதுகாக்கக் கூடிய சுயாட்சிப் பகுதி குரோஷியாவினுள் அமைக்கப்படுமா, அல்லது, குரோஷியாவின் சுதந்திரம் யூகோசிலாவிய சமஷ்டி அரசினால் ஏற்றுக் கொள்ளப்படாமலும், ஐரோப்பிய சமூகத்தால் தீர்வுகாணப்படாமலும், யுத்தத்தில் முடியுமா என்பன கேள்விக்குறிகளாக உள்ளன. ஸ்லோவேனியா, சுதந்திரம் அடையுமென்றால் அதனோடு சில சமாளிப்புகளுடன் 3 மாத காலத்தின் பின்னர் குரோஷியாவும் விடுதலைபெற்ற நாடாகவே வெளிப்படும். ●

## கல்லறை நோக்கி கடும்பயணம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெளிநாடுகளில் வாழுகின்ற எமது ஈழமக்களே !

இவர்கள் எங்களது மக்கள்! ஒத்திசைக்கின்ற சக இதயங்கள்!
மரங்களின் கீழும், தெரு ஓரங்களிலும்......
எங்கள் மண்ணிலே, எமது மக்கள் அகதிகளாம்.
இதனைச் சகிப்பது முறையா?
பூட்டிக் கிடக்கின்ற, பாவனையற்ற உங்கள் வீடுகள்
இவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து, காக்கத் துணிவது தவறா?
நேயம் பொங்க இதனைப் புரிதல் குற்றச் செயலா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்